விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 02 திங்கட்கிழமை (17.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே


# நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிலம் எமக்குரியது

## தென்பகுதியிலிருந்து சிங்களவர்களை அழைத்து வந்து பிக்குகள் நேற்றுப் போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - செம்மலை நீராவியடி பிள்ளையார் நிலம் எமக்குரியது என தென்பகுதியிலிருந்து சுமார் 300ற்கும் மேற்பட்ட சிங்களவர்களை அழைத்து வந்து பிக்குகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(23ஆம் பக்கம் பார்க்க)



## எதிர்ப்புக்களை மீறி மீண்டும் நாளை கூடுகிறது தெரிவுக்குழு


(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எதிர்ப்பை மீறி செயற்பட்டு வரும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஆறாவது அமர்வு நாளை 18 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் காத்தான்குடி பொலிஸில் சேவையாற்றிய முன்னாள் பொறுப்பதிகாரி, தற்போதைய பொறுப்பதிகாரியும் சுபீ முஸ்லிம் அமைப்பின் பிரதிநிதிகளும் சாட்சியம் வழங்கவுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற 23

## முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியமை குற்றம் சாட்டப்பட்டவர்களை பாதுகாக்கவே

### சார்ள்ஸ் எம்.பி குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் அமைச்சர்களின் இராஜினாமா ஒற்றுமையை வெளிப்படுத்தினாலும் பயங்கரவாதிகள் அல்லது நேரடியாக குற்றம் சாட்டப்பட்ட அரசியல்வாதிகள் தப்பித்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையுமென வன்னி 23

## பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரை கட்டுவதை நிறுத்த வேண்டும்

### மனோ வலியுறுத்து

(கொழும்பு)

இந்துக்களும் - பௌத்தர்களும் ஒற்றுமையாக இருப்பது நல்லது. அதற்கு முன்னர் பௌத்தர்களே இல்லாத ஊரில் காணி பிடித்து விகாரை கட்டுவதை நிறுத்த வேண்டும். இதனை நான் அத்து 23

## அமைச்சுப்பதவியை பொறுப்பேற்கத்தயார்

### கபீர்ஹாசீம் அறிவிப்பு

(கொழும்பு)

அமைச்சுப் பதவியை மீண்டும் ஏற்றுக்கொள்ளத் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் கபீர்ஹாசீம் தெரிவித்துள்ளார்.

கேகாலை - அம்பன்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது அவர் இத 23

## யாழ்.பல்கலைக்கழக பணிவெற்றிடத்துக்கு அதிகளவு முஸ்லிம்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் காணப்படும் பணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களில், 137 பேர் முஸ்லிம்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களால் சிபாரசு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் 23

## ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கத் தயாராகவுள்ளேன்

### சபாநாயகர் மீண்டும் அறிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்தால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்குவதற்கு தயார் என சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார். 23

## எமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை - ரிஷாத்

(கொழும்பு)

எமது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ளாமல் மீண்டும் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதே நல்லது என பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.



முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியுள்ள நிலையில், மீண்டும் பதவியேற்குமாறு பல தரப்பினரிடமிருந்து முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுக்கப்படும் நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். 23

## நீரில் மூழ்கி மாணவன் பலி

### தலைமன்னாரில் துயரம்

(மன்னார்)

தலைமன்னாரில், கடலில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான். நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சம்ப 23

## பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றாத கடமை தவறும் அதிகாரிகளுக்கு ஆளுநர் கடிவாளம்

### தகவல் வழங்க விசேட தொலைபேசி வலையமைப்பை உருவாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள அரச அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களில் சேவையைப் பெற வரும் பொதுமக்கள் தமது சேவையில் ஏற்படும் இடையூறுகள் பற்றி வடமாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்வதற்கான விசேட தொலைபேசி வலையமைப்பையும், நடமாடும் ஆளுநர் செயலணியையும் உருவாக்க வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வட மாகாணத்தில் உள்ள அரச அலுவலகங்களில் பொது மக்கள் சேவையைப்பெற வரும் போது கடமை நேரத்தில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நிற்ப 23

## எதிர்வரும் ஜூலை முதல் ஓய்வூதியக் கொடுப்பனவை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

அரச சேவையிலிருந்து இது வரையில் ஓய்வுபெற்றுள்ள சகல அதிகாரிகளுக்குமான ஓய்வூதிய கொடுப்பனவுகளை எதிர்வரும் ஜூலை மாதம் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. 23

## அமைச்சரவை கூட்டங்கள் நாளை நிச்சயம் நடைபெறும் - ரவி

(கொழும்பு)

அமைச்சரவை கூட்டங்களை முன்னெடுப்பதில் எந்த சிக்கலும் கிடையாது. இந்த வாரத்துக்கான அமைச்சரவை கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தலைமையில் நிச்சயமாக நாளை கூடும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

பிணைமுறி விவகாரத்தில் என் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக என் மீது உள்ள நியாயத்தை நான் வெளிப்படுத்தியுள்ளேன் எனத் தெரிவித்தார். (3)

## நீராவியடி பிரச்சினையை ரத்தினதேரர் தீர்த்து வைப்பாரா? - செல்வம் எம்.பி

(வவுனியா)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்விற்கு எதிராகவும், இனவாதத்தைத் தூண்டும் வகையிலும் அதிகளவில் குரல் எழுப்புவது பௌத்த தேரர்களே. அடிப்படைவாதத்திற்கு எதிராக பௌத்தர்களும், இந்துக்களும் ஒன்றிணைய வேண்டும் என்று கூறுவோர் முதலில் திருக்கேதீஸ்வரம், முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் என்பவற்றை அண்மித்து அடாவடித்தனமாக பௌத்த விகாரைகள் அமைப்பதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (3-250)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 1985ம் ஆண்டு ரேவதி நட்சத்திரம் 52 1/2 கி.பா 7ல் சூரி,செவ்வாய் உள்ள அரச உத்தியோகம் செய்யும் மணமகனுக்கு உத்தியோகமுள்ள தகுந்த மண மகளை எதிர்பார்க்கின்றனர். (C-6705)

தொடர்புகளுக்கு

**077 906 2476**

# படுகாயமடைந்த இளைஞனின் கைத்தொலைபேசி திருடப்பட்டதால்

### உயிரைக் காப்பாற்ற முடியாமல்போன பரிதாபம்


விபத்தில் படுகாயமடைந்து விழுந்து கிடந்த இளைஞனின் பெறுமதி வாய்ந்த கையடக்கத் தொலைபேசி திருடப்பட்டதனால் அந்த இளைஞனின் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போயுள்ளது.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதிக்கும் யாழ்.பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதிக்குமிடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் கொக்குவில் சேச் லேனைச் சேர்ந்த தர்மானந்த சிவம் நித்திலன் (வயது 19) என்ற இளைஞன் படுகாயமடைந்துள் ளார்.

இதன்போது அவர் வைத்திருந்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை அங்கு நின்ற யாரோ திருடிச் சென்றுள்ளனர்.

இதனால் குறித்த இளைஞனின் விபரத்தை அறிய முடியாமல் இருந்ததுடன் குறித்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில மணித்தியாலங்கள் உயிரோடு இருந்தபோதிலும் அவர் இறக்கும் வரை அவரது குடும்பத்தினருக்குத் தகவல் தெரிவிக்க முடியாமல் போனது என்றும், இளைஞன் வீடு திரும்பவில்லை என்று பெற்றோர் தேடியபோதே அந்த உயிரிழப்புச் சம்பவம் தெரியவந்துள்ளது. (ம-3)

## துயர் பகிர்கின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி பட்டக் கற்கைநெறியைப் பயிலுகின்ற எமது சக மாணவன் **சிதம்பரப்பிள்ளை குகதாசன்** அவர்களது அன்பு மாமனார்

அமரர் **முருகன் நடுவில்**

பிறப்பு: 10.03.1935 | இறப்பு: 14.06.2019

கடந்த 14.06.2019ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்
யாழ்.பல்கலைக்கழகம் சைவசித்தாந்த முதுகலைமாணி (மாணவர்கள்)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வுக்கான அழைப்பும்



அமரர்
**கிருஷ்ணபிள்ளை சின்னம்மா**

கடந்த 19.05.2019 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி **கிருஷ்ணபிள்ளை சின்னம்மா** அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நாளை 18.06.2019 செவ்வாய்க்கிழமை அன்று காலை 6.00 மணிக்கு புற்றளைச் சித்திவிநாயகர் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 9.00 மணியளவில் நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்திய (சபிண்டி) நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய அன்னதான மடத்தில் மு.ப 11.30 மணியளவில் நிகழும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு வழங்கத் தவறியிருப்பின் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்: குடும்பத்தினர்
சூரியபவனம்
புலோலி தெற்கு, புலோலி.

தொடர்புகளுக்கு:- கி.யோகநாதன் - 0777044916 | கி.குஹநாதன் - 0016133143377
கி.குகநாதன் - 0776225051 | கி.சூரியகுமாரி - 0771654607
(C-6707)

## கண்ணீர் அஞ்சலி



**த.நித்திலன்**

எமது பாடசாலை ஆரம்பப் பிரிவுப் பகுதித்தலைவர் திருமதி மா.தர்மானந்தசிவம் அவர்களின் மகன் செல்வன் த.நித்திலன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **வாலபூரணி கனகேந்திரன்**
(அன்னம்)

திதி: பிரதமை


தாயின் மடியில்
1950.01.01

இறைவன் அடியில்
2018.06.29

அன்புக்கு இலக்கணமாய் இருந்தீர்கள்
அனைவரையும் பாசத்தோடு கவனித்தீர்கள்
நல்வழியில் எம்மை வழிநடத்தினீர்கள்
எங்கள் நலனே உங்கள் நலன் என இருந்தீர்கள்
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
ஒருவருடம் ஆனாலும் எப்போதும்
உங்கள் நினைவுடன் இருப்போம்
உங்கள் ஆசியுடன்...

ஒட்டுவெளி,
மிருசுவில்.

க.கனகேந்திரன்
குடும்பத்தினர்



# இலங்கை பெளத்த நாடா என்பது குறித்து விவாதிப்பதும் அடிப்படைவாதமே!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(களுத்துறை)

**இலங்கை என்பது சிங்கள- பெளத்த நாடு என்பதில் சந்தேகம் இல்லை என்றும் இதனை விவாதத்திற்கு உள்ளாக்குவதும் ஒரு வகையில் அடிப்படைவாதமே என்றும் ஒருங்கிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

களுத்துறையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பெளத்தர்கள் விகாரைகளுக்குச் செல்லக்கூட அச்சமானதொரு சூழ்நிலைதான் இலங்கையில் தற்போது நிலவி வருகிறது. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவும் அஞ்சுகிறார்கள்.

இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இந்தச் சம்பவம் குறித்து முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டும் அரசாங்கம் கண்டுகொள்ளாததன் விளைவாகவே இவை நேர்ந்துள்ளன.

தற்போது, இதுகுறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளாமல் ஒருவருக்கொருவர் மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை ஸ்தாபித்தார்கள். இதனால் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படும் என்று கருதினால், தற்போது இருப்பதைவிட பிரச்சினைகள் பெரிதாகித்தான் உள்ளன. இது சாதாரண ஒரு விடயமல்ல.

சமூகத்தில் முறையான புரிந்துணர்வு இல்லாத காரணத்தாலேயே அடிப்படைவாதிகள் உருவாகின்றார்கள்.

இந்த அடிப்படைவாதம் இன்று நாடாளுமன்றம்வரை சென்றுள்ளது. இலங்கை என்பது சிங்கள, பெளத்த நாடு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதனை விவாதிப்பதுகூட ஒருவகையில் அடிப்படைவாதம்தான்.

சில அரசியல்தலைவர்கள் தமது தேர்தல் வெற்றிக்காகவும் அரசியல் எதிர்காலத்திற்காகவும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முற்படுகிறார்கள். இவைதான் இன்று இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பில் இனவாதிகள் மீண்டும் அட்டகாசம் வீசப்பட்ட நிலையில் 12 புத்தர் சிலைகள் மீட்பு

## சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்யுமாறு பிக்குகள் கொந்தளிப்பு

(இராஜகிரிய)

கொழும்பில் இனவாதிகள் சிலரால் வீசப்பட்ட புத்தர் சிலைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இராஜகிரிய, லேக்ரைவ் பகுதியிலுள்ள கான் ஒன்றில் வீசப்பட்டிருந்த நிலையில் 12 புத்தர் சிலைகள் மீட்கப்பட்டன.

அந்தப் பகுதியில் வேலையில் ஈடுபட்டிருந்த சிலர் சிலைகளைக் கண்டுள்ளனர். இது குறித்து உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் வழுங்கப்பட்டது.

விரைந்து செயற்பட்ட நாரஹேன்பிட்டி பொலிஸார் வீசப்பட்டிருந்த புத்தர் சிலைகளை மீட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் ஒன்று புத்தர் சிலைகளை அங்கு வீசி விட்டுச் சென்றதை நேரில் பார்த்தவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இந்தத் தகவலை அறிந்த பிக்குமாரும் அந்தப் பகுதிக்கு சென்றமையால் அங்கு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

இதுவொரு திட்டமிட்ட இனவாதச் செயல் என்றும் இந்த நாசகார வேலையில் ஈடுபட்ட இனவாதிகளை உடனடியாக கைதுசெய்யுமாறும் தேரர்கள் கோரிக்கை விடுத்தனர்.





இச்சம்பவம் தொடர்பில் நாரஹேன்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அரசியல் ஸ்திரமற்ற நிலையை நீக்க பொதுத் தேர்தலுக்குச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நீடித்து வரும் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையை நீக்க நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சமகால அரசியல் தளம்பல் நிலை தொடர்பாக அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில் தற்போது தோன்றியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மக்கள் அரங்குக்குச் செல்வதே முக்கியமானதாகும். எனவே, அரசு நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும்.

அதற்கும் முடியாவிட்டால், விகிதாசாரத் தேர்தல் முறைமையின்படி மாகாண சபைத் தேர்தலையாவது நடத்தி மக்களின் நிர்வாகத்தை நடத்த வழிவகை செய்ய வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துவதற்கு நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைத் தாக்கல் செய்து நிறைவேற்றுவதன் மூலமாக இரண்டு வாரங்களில் தேர்தலுக்குச் செல்ல முடியும்.

இப்பொழுது நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக இருப்பது ஜனநாயக முறைமையிலான மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு தேர்தல்கள் காலதாமதப்படுத்தப்படுவதாகும்.

இனவாதிகளான தலைமைகள் எவரும் இந்த நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கமாட்டார்கள். எந்தத் தேர்தலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் வரலாம் என்கின்ற தளம்பல் நிலையில்தான் நாடு முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது தடுமாறிக் கொண்டிருக்கிறது.

இனித் தேர்தலை நோக்கி நகர்வதைத் தவிர அரசியல் தலைமைகளுக்கு வேறு தெரிவு இல்லை.

அது மாகாண சபைத் தேர்தலாகவோ, பொதுத்தேர்தலாகவோ, ஜனாதிபதித் தேர்தலாகவோ இருக்கலாம். ஆனால் தேர்தல் நடத்தப்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## குண்டுத் தாக்குதல் குறித்து விசாரிக்கும்

# விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஜனாதிபதி,பிரதமரை அழைக்க தீர்மானம்



ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் விசேட நாடாளுமன்றத்தெரிவுக்குழுவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சாட்சியம் வழங்க வரவழைப்பது குறித்து குழு உறுப்பினர்கள் மத்தியில் கலந்துரையாடல் இடம்பெற்றதாக பிரதிச் சபாநாயகரும் அக்குழுவின் தலைவருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தாங்கள் எந்தவொரு உறுதியான முடிவுக்கும் வரவில்லை எனத் தெரிவித்த அவர், முதலில் பிரதமரையா அல்லது ஜனாதிபதியையா அழைப்பது எனத் தீர்மானிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

எனினும் இந்தக் குழு பெரும்பாலும் ஜனாதிபதி மற்றும் பிரதமரை வரவழைக்கும் என அக்குழுவின் உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ உறுதிப்படுத்தினார்.

அதாவது 19 ஆவது திருத்தத்தின் படி, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு முன் ஜனாதிபதி வரவழைக்கப்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் பிரதமரை அழைப்பது உறுதி என்றாலும் ஜனாதிபதியை அழைப்பதில் உள்ள சட்டபூர்வமான தன்மை குறித்து உறுதியான நிலைப்பாடு இல்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன்படி அந்தக் குழுவின் ஆறாவது அமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதன்போது காத்தான்குடி பொலிஸில் சேவையாற்றிய முன்னாள் பொறுப்பதிகாரி மற்றும் தற்போதைய பொறுப்பதிகாரி ஆகியோரை முன்னிலையாகுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரோகித் சரவெடியாய் முழக்கம் பாகிஸ்தான் புஸ்வாணமானது

உலக கோப்பை கிரிக்கெட்டில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி 89 ரன்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது.

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் உலகக்கோப்பை தொடரின் 22-வது லீக் ஆட்டம் மான்செஸ்டரில் நேற்று மதியம் 3 மணிக்கு தொடங்கியது. டாஸ் வென்ற பாகிஸ்தான் கேப்டன் சர்பராஸ் அகமது பந்து வீச்சை தேர்வு செய்தார். இந்திய அணியில் தவானுக்குப் பதில் விஜய் சங்கர் இடம்பிடித்தார்.

ரோகித் சர்மா (140), லோகேஷ் ராகுல் (57), விராட் கோலி (71 மழையின்போது ஆட்டம் நிறுத்தப்பட்டபோது எடுத்த ரன்) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் இந்தியா 46.4 ஓவரில் 305 ரன்கள் எடுத்திருக்கும்போது மழையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

சுமார் அரைமணி நேரம் கழித்து மழை நின்றதும் மீண்டும் ஆட்டம் தொடங்கியது. விராட் கோலி 77 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். மழைக்குப்பின் இந்தியா விளையாடி 20 பந்தில் 31 ரன்கள் எடுக்க ஒட்டுமொத்தமாக 50 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 336 ரன்கள் குவித்தது.

விஜய் சங்கர் 15 பந்தில் 15 ரன்கள் எடுத்தும், கேதர் ஜாதவ் 8 பந்தில் 9 ரன்கள் எடுத்தும் களத்தில் இருந்தனர். பாகிஸ்தான் அணி சார்பில் முகமது அமிர் 47 ரன்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார். இதனால் பாகிஸ்தானுக்கு 337 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது இந்தியா.

பின்னர் 337 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் பாகிஸ்தான் அணி களமிறங்கியது. இந்நிலையில் 35-வது ஓவரில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் பாதியில் நிறுத்தி வைக்கப்படட போது பாகிஸ்தான் அணி 35 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 166 ரன்கள் எடுத்திருந்தது. பாகிஸ்தான் அணியின் சார்பில் அதிகபட்சமாக பக்தர் சமான் 62(75) ரன்களும், பாபர் அசாம் 48(57) ரன்களும் எடுத்திருந்தனர். இமாத் வாசிம் 22(20) ரன்களும், சதாப் கான் 1(2) ரன்னுடனும் களத்தில் இருந்தனர்


இரண்டாவது முறை மழை குறிக்கிட்டதால் டி.எல்.எஸ். முறைப்படி ஆட்டம் 40 ஓவர்களாக குறைக்கப்பட்டது. பாக். அணி 302 ரன்கள் எடுத்தால் வெற்றி என நிர்ணயிக்கப்பட்டது. டி.எல்.எஸ். முறைப்படி பாகிஸ்தான் அணி 30 பந்துகளில் 136 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களம் இறங்கியது.

இதனை தொடர்ந்து ஆடிய பாக். அணி வீரர்கள் இமாத் வாசிம் 46 (39) ரன்களும், சதாப் கான் 20(14) ரன்கள் எடுத்து களத்தில் நின்றனர். இதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவர் முடிவில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட் இழப்பிற்கு 212 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் இந்திய அணி 89 ரன்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது.




இந்திய அணியின் சார்பில் குல்தீப் யாதவ், ஹர்திக் பாண்ட்யா, விஜய் சங்கர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

# ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்தும் பந்து வீச்சாளர்கள்




மிட்செல் ஸ்டார்க்



ஜிம்மி நீசம்



முகமது ஆமிர்

இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் பந்துவீச்சாளர்கள் பலர் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தி வருகின்றனர்.

பொதுவாக இங்கிலாந்து ஆடு களங்கள் துடுப்பாட்டத்திற்கு சாதமாகவே இருப்பவை. எனவே பெரும்பாலான அணிகள் 300 ஓட்டங்களை எளிதில் எட்டி விடுகின்றன. நடப்பு உலகக் கிண்ணத் தொடரில், 6 போட்டிகளில் அணிகள் 300 ஓட்டங்களை கடந்துள்ளன.

ஆனால் இதுபோன்ற ஆடுகளங்களிலும் ஒரே போட்டியில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி, சில பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.


அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக ஐந்து விக்கெட்டுகளை சாய்த்தார்.

நியூசிலாந்தின் சகல துறை ஆட்டக்காரர் ஜிம்மி நீசம், ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக 5 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதை பெற்றார்.

பாகிஸ்தான் அணியின் முகமது ஆமிர், பலம் வாய்ந்த அவுஸ்திரேலியாவின் விக்கெட்டுகளை வீழ்த்தினார். அத்துடன் உலகக் கிண்ணத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 5 விக்கெட்டுகள் வீழ்த்திய முதல் பாகிஸ்தான் வீரர் என்ற சிறப்பையும் பெற்றார்.

இவர்களைப் போல் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் சஹால், நியூசிலாந்தின் லாக்கி பெர்குசன், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஓஷைன் தாமஸ் ஆகியோர் ஒரு போட்டியில் 4 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளனர். இனி வரும் போட்டிகளிலும் பந்துவீச்சாளர்களின் ஆதிக்கம் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# முதலாவது வெற்றியை பதிவு செய்தது தென்னாபிரிக்கா



மோசமான நிலையில் இருந்த தென்னாபிரிக்க அணி, ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான போட்டியின் மூலம் தன்னுடைய முதல் வெற்றியை ருசித்துள்ளது.

உலகக்கிண்ணம் தொடரின் 21ஆவது லீக் போட்டியானது கார்டிஃப் மைதானத்தில் ஆப்கானிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் நடைபெற்றது.

இதுவரை ஒரு போட்டியில் கூட வெற்றி பெறாத தென்னாபிரிக்கா, நாணயச் சுழற்சியில் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, தென்னாபிரிக்க வீரர்களின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 34.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களைக் குவிந்திருந்தது.

அந்த அணியில் ஹஸ்ரத்துல்லா ஸசாய் (22), நூர் அலி ஸத்ரான் (32) மற்றும் ரஷீத் கான் (35) ஆகியோரை தவிர மற்ற அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க எண்களையே குவித்திருந்தனர்.

தென்னாபிரிக்க அணி சார்பில் இம்ரான் தாஹிர் 4 விக்கெட்டுகளையும், கிறிஸ் மோரிஸ் 3 விக்கெட்டுகளையும், ஆண்டிலே பிலுக்குவாயோ 2 விக்கெடடுகளையும், காகிசோ ரபாடா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர்.

126ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்கிற எளிய இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 28.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து வெற்றி பெற்றது.

இதன்மூலம் தென்னாபிரிக்க அணி நடப்பு உலகக்கிண்ணம் போட்டியில் தன்னுடைய முதல் வெற்றியினை பதிவு செய்துள்ளது. (க)


# மத்தியதர வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே தோல்விக்கு காரணம்- திமுத் கருணாரத்ன

உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியா அணியிடம் தோல்வி அடைந்ததற்கான காரணத்தை இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்ன கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்த போட்டியில் இலங்கை அணியை 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அவுஸ்திரேலியா அணி வெற்றிப்பெற்றது.

போட்டிக்கு பின்னர் பேட்டியளித்த இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்ன, ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி சிறப்பாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தது.

அதேபோல, பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நாங்களும் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்டோம்.



இலக்கை எட்ட முடியும் என்று தான் நினைத்தோம். ஆனால், மத்திய வரிசை வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டம் காரணமாகவும், முக்கியமான தருணங்களில் விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் தோல்வியை சந்திக்க நேரிட்டது.


அதே சமயம், அவுஸ்திரேலிய அணி பந்து வீச்சாளர்கள் மிகச்சிறப்பாக பந்து வீசினார்கள். நாங்கள் ஒரு திட்டத்தை வைத்திருக்க வேண்டும். ஆனால் அதை நாங்கள் இந்தப் போட்டியில் செய்யவில்லை.

மழையால் நாங்கள் இரண்டு ஆட்டங்களை இழந்தோம். எஞ்சிய போட்டிகளில் குறைந்தது இரண்டு போட்டிகளில் நாங்கள் வெல்ல வேண்டும் என திமுத் கருணாரத்ன தெரிவித்துள்ளார். (க)

# மரண அறிவித்தல்

## அமரர். கிருஷ்ணர் தங்கராஜா

**மலர்வு**
**1950 - 10 - 22**



**உதிர்வு**
**2019 - 06 - 13**

சண்டிலிப்பாய் கல்வளையைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடி. சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் தங்கராஜா அவர்கள் 13.06.2019 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான இராசமணி, தங்கரத்தினம், அன்னபூரணம், நாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவபாலன் (சமாதான நீதவான் வலி.மேற்கு), கிருஷ்ணபாலன் (இளைப்பாறிய உத்தியோகத்தர், நீதவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும், மதிவதனி (முன்னாள் எழுதுநர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்- ஜேர்மனி), ரவிசங்கர் (லண்டன்), கலைமதி (ஜேர்மனி), கலைச்செல்வி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சேதீஸ்வரன் (ஜேர்மனி), துஷ்யந்தி (லண்டன்), சதீஸ்வரன் (ஜேர்மனி), நந்தநேசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஜானன், கௌரிசன், கஜேதன், சந்தோஷ், சரண்யா, சரண், சஸ்ரிகா, சஸ்ரிகன், நிர்ஷா ஆகியோரின் ஆருயிர் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.06.2019 திங்கட்கிழமை இன்று முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.

(C-6704)

தகவல்:
குடும்பத்தினர்.



போதை ஒழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை போதை ஒழிப்பு தொடர்பான கருத்தமர்வும் மரநடுகை நிகழ்வும் இடம் பெற்றன. இந்நிகழ்வில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி எதிரிசிங்க, தென்மராட்சி பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ர.அனுராசன், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.போதைப்பொருள் தொடர்பான கருத்தமர்வைத் தொடர்ந்து பொலிஸ் பொறுப்பதிகாரி எதிரிசிங்க, பாடசாலை அதிபர் க.மங்களேஸ்வரன், பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் ர.அனுராசன் மற்றும் மாணவர்கள் ஆகியோர் இணைந்து சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகளை நாட்டினர்.
(படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

# அரச விருதுக்கான போட்டி

(யாழ்ப்பாணம்)

அரச நடன, இசை விருதுக்கான போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் இடம்பெறும் என கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ். மாவட்ட உத்தியோகத்தர் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சால் கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மன்றங்களில் இருந்து குறித்த விருதுக்கான போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

45 நடனப் போட்டியாளர்களும் 135 இசைப்போட்டியாளர்களும் கலந்து கொள்ளும் அரச விருதுக்கான போட்டியை எதிர்வரும் ஜூலை மாதம் 13-14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்த தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# யாழ்.பேருந்து நிலையத்திலுள்ள மலசலகூடம் இரவிலும் திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தின் பொது மலசலகூடம் இரவு வேளைகளில் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் திறந்திருக்கும் என வடமாகாண பதில் பிரதான பிராந்திய முகாமையாளர் எஸ். பாஸ்கரன் தெரிவித்தார்.

சுமார் ஒருகோடி ரூபா நிதியொதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட யாழ்.மத்திய பேருந்து நிலையத்தின் மலசலகூடம் கடந்த ஒரு மாதகாலமாக இரவு 10 மணியுடன் மூடப்பட்டு வந்தது.

இந்நிலையில் குறித்த பேருந்து நிலையத்தின் மலசலகூடத்தில் சேருகின்ற கழிவுகளை ஒரு நாளைக்கு இருவேளை அகற்ற வேண்டும். இதற்கு யாழ். மாநகர சபை ஒத்துழைக்காததால் குறித்த மலசலகூடத்தை பகுதி நேரமாக மூடவேண்டிய நிலை ஏற்பட்டதாக இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ்.நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை இதுதொடர்பில் யாழ். மாநகர சபையினர் தெரிவிக்கும்போது, சபையில் இரு கழிவகற்றும் வாகனங்களே இருப்பதால் கடைகள், வீடுகள், அரச அலுவலகம் என்பவற்றின் கழிவுகளை அகற்றுவதற்கு தம்மிடம் வளப்பற்றாக்குறை காணப்படுவதாக யாழ்.மாநகர சபை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

எனவே பொதுமக்களின் நலன்கருதி இரவு முழுவதும் பயன்படுத்தக்கூடிய வகையில் ஒரு மலசலகூடத்தை திறந்து விடுவதாகவும் மலசலகூடத்தை பயன்படுத்த விரும்புவோர் கடமையில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் சாவியைப் பெற்றுக்கொள்ள முடியுமென பதில் பிரதான பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (இ-10)

# தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 10 சூரிய மின்மோட்டர்கள் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் சூரிய சக்தியில் இயங்கும் மின்மோட்டர்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடமாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.அஞ்சலாதேவி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 10 சூரிய மின் மோட்டர்களை 50 வீத மானிய அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

குறித்த திட்டத்தில் இணைந்து கொள்ளும் விவசாயிகள் வருடம் தோறும் தொடர்ச்சியான பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக இருக்கவேண்டும்.

எனவே தகுதியான விவசாயிகள் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கலைஞர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் இணைய விரும்புவோர் பதியலாம்

(யாழ்ப்பாணம்)

கலைஞர்களுக்கான ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் இணைந்து கொள்ள விரும்பும் 32-35 வயதுடைய கலைஞர்களை தமது பிரதேச செயலகத்திலுள்ள கலாசார உத்தியோகத்தரைத் தொடர்பு கொள்ளுமாறு கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்தது.

19 ஆயிரம் ரூபாவை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வைப்பிலிடுவதன் மூலம் நிரந்தர கலைஞர் ஓய்வூதியத்தை வாழ்நாள் முழுவதும் பெற முடியும் என கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்தது. (இ-10)

# சாவகச்சேரியில் ஆறு வர்த்தகர்களுக்கு 23 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தால் 23 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்திற்குட்பட்ட பகுதிகளில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது பாவனையாளர் சட்டங்களை மீறிய 6 வர்த்தகர்களுக்கெதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது குறித்த அபராதம் விதிக்கப்பட்டது. (இ-10)

# இராசி பலன்

**மீனம்**: புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மேடம்**: அச்சுறுத்தல் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**இடபம்**: குடும்பத்தில் எதிர்பாராத வகையில் சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள்.

**மிதுனம்**: நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், விருந்தினர் வருகையுண்டு, ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**கும்பம்**: எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு.

**கடகம்**: பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும் நாள், கடன்கள் வசூலாகும்.

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | சூரி, செவ் ராகு, புத |
| | **இராசி பலன்** கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் கார்த்திகை, ரோகினி | | |
| சனி, கேது | குரு, சந் | | |

**17.06.2019**
ஆனி 02, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
பூரணை பிற்பகல் 2.49 மணிவரை
கேட்டை முற்பகல் 11.41 மணிவரை
சுபநேரம் 11.53-1.23 மணிவரை
இராகுகாலம் 7.28-8.53 மணிவரை
பூரணை விரதம்
வளவன்

**மகரம்**: திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்**: பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, எதிர்பாராத நன்மைகள் இடம் பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு**: சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**விருச்சிகம்**: வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்**: இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தேகநலனில் அக்கறை காட்டுவீர்கள், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**கன்னி**: கடன் சுமை குறையும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

# உயர்தரம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் வருடாந்த ஆய்வு மாநாட்டை முன் னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வருடந்தோறும் இந்து சமய, கலாசார அலு வல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் ஆய்வரங்கு நிகழ்வு வரிசையில் இவ் வருடம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் "இருபதாம் நூற் றாண்டுக்கு முற்பட்ட ஈழத்து இந்துக் கோயில்கள் -தொல்பொருட்களும் இலக்கிய மரபுகளும்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஈழத்தில் இந்து சமயத்தின் தொன்மை யையும் அது பெற்றிருந்த செல்வாக்கையும் உணர்த்துவனவாக அமைகின்ற இந்துக் கோயில்களின் வரலாற்றுப் பெருமையைச் சான் றுகளினூடாக மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்ட இவ் ஆய்வு மாநாடு தொடர்பான விழிப் புணர்வினை மாணவர்களிடையே ஏற்படுத் தும் நோக்கில் இக் கட்டுரைப் போட்டியை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் "தேவாரப்பாடல் பெற்ற ஈழத்துத் திருத்தலங்கள்" அல்லது "சமுதாய நிறுவனங்களாக ஆலய நிறுவ னங்கள்" அல்லது "இலங்கையில் முருக வழி பாட்டின் தொன்மை" அல்லது "இலங்கையில் சைவர்கள் வாழ்வின் ஆதாரமாக அமையும் கோயில் பண்பாடு" என்னும் தலைப்பில் கட்டுரை அமைக்க வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்கள், பிரதேச ஆலய மொன்றின் வரலாற்றுச் சிறப்பையும் கீர்த்தியை யும் அவ்வாலயம் தொடர்பான கல்வெட்டுச்சான் றுகளையும் தலப்பிரபந்தங்களையும் அடிப்படை யாகக் கொண்ட விடயப் பரப்பில் கட்டுரை அமை க்க வேண்டும். (தலைப்பு தெரிவு செய்யப்படும் ஆலயத்தின் பெயராக இருக்க வேண்டும்) பாட சாலை மாணவர்களுக்கான கட்டுரைகள் 1000 சொற்களுக்கு மேற்படாமலும் பல்கலைக்கழக மாணவர்களின் கட்டுரைகள் 2000 சொற்க ளுக்கு மேற்படாமலும் கையெழுத்துப் பிரதியா கவும் அமைதல் வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் - பாடசாலை அதி பராலும் பல்கலைக்கழக மாணவர்கள் - துறைத் தலைவரினாலும் கட்டுரைகளை உறுதிப்படு த்தி, "பணிப்பாளர். இந்து சமய, கலாசார அலு வல்கள் திணைக்களம், இல.248, 1/1 காலிவீதி, கொழும்பு - 04" என்னும் முகவரிக்கு 10.08. 2019 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் எனப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித் தார். (இ-7)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 07.02.1979 மிருகசீரிடம் 2ஆம் பாதம் சூரியன் செவ்வாய் 10 இல் குற்றமில்லை. கி.பா: 6 1/2, சொந்தமாக தொழில் நடத்தும் மணமகனிற்கு பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கிறோம்.

தொடர்பு:- 076 550 1939, 075 518 8150

(9160)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.தில்லைநாதன் ரவீந்திரநாதன்



எமது பாடசாலைக்கு புதிய அதிபராக கடமையேற்ற திரு. தில்லைநாதன் ரவீந்திரநாதன் அவர்கள் 2019.05.07 அன்று அகில இலங்கை சமாதான நீதவானாக பதவியேற்றமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(9168)

பாடசாலை ஆசிரியர் கழகம்,
யா/நல்லூர் தெற்கு,
ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.



## கிருஷ்ணா அடகு சேவை

### பதிவு இல:- J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2018 ஆம் ஆண்டு 31.11.2018 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2019 ஆம் ஆண்டில் ஜூலை மாதம் 15 ஆம் திகதி (15.07.2019) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.07.2019 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

2018 ஆம் ஆண்டு 09 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

உரிமையாளர்:- A.S.Surendran

(C-6696)

இல. 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311

இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046



## வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை

### விலை மனுக் கோரல்

வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தேவையான தகைமைகளைக் கொண்டுள்ள பேருந்து உரிமையாளர்களிடம் இருந்து வடமாகாணத்தினுள் மாவட்டங்க ளுக்கிடையேயான சொகுசு கடுகதி பேருந்து சேவைகளுக்கான விலை மனுவினை கோருகின்றது. கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் பின்வருமாறு.

01. விண்ணப்பதாரி வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் நியதிச்சட்ட பிரமாணங்களுக்கு அமைவாக விண்ணப்பம் செய்தல் வேண்டும். அத்துடன் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து வருடங்களாவது வடமாகாணத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருப்பதனை வாக்காளர் பட்டியல் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.
02. பேருந்து முழுதாக குளிரூட்டப்பட்டு இருத்தல் வேண்டும்.
03. ஆசனங்களின் எண்ணிக்கை 28 இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
04. பேருந்து இலங்கையில் பதிவு செய்து பத்து வருடங்களிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
05. பயணி ஒருவரிடம் அறவிடப்படும் கட்டணம் சாதாரண கட்டணத்தின் இரு மடங்காகும்.
06. உரிய பயிற்சிகள் பெற்றுக்கொண்டு வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட சாரதி, நடத்துநர் கடமையாற்றுதல் வேண்டும்.
07. பயணிகளுக்கான பயணச்சீட்டு கட்டாயமாக வழங்கப்படுதல் வேண்டும்.
08. பயணிகள் எல்லோருக்கும் ஆசன வசதி இருத்தல் வேண்டும். ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றக்கூடாது.
09. மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 2000/- காசாகச் செலுத்தி கேள்விப்பத்திர விண்ணப் பப்படிவங்களை 17.06.2019 முதல் 10.07.2019 வரை அலுவலக நேரங்களில் காலை 9.00 முதல் மாலை 3.00 வரை இல-45. றக்கா ஒழுங்கை. சுண்டுக்குளி என்னும் முகவரியிலுள்ள வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
10. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 11.07.2019 ஆம் திகதி மு.ப.11.00 முன்னர் பெறுகைக்குழுத் தலைவர், வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, இல-45. றக்கா ஒழுங்கை, சுண்டுக்குளி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பொது முகாமையாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சொகுசு கடுகதி பேருந்து சேவைக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.
11. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை 021 221 5961 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.
12. ஒப்பந்த அளிப்பு செய்யப்படும் பொழுது வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் சொகுசு கடுகதி வழியனுமதிப்பத்திரத்தினை ஒப்பந்த அளிப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் குறிக்கப்பட்ட தொகையினை காசாகச் செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. கேள்வி நடைமுறை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre-Bid Meeting) 01.07.2019 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் நடைபெறும்.
14. கேள்விப்பத்திரங்களை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும்.

தலைவர், பெறுகைக்குழு,
வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை,
வடமாகாணம்.

(C-6699)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L,வியாபாரம்
எதிர்பார்ப்பு: A/L,உத்தியோகம் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/9793

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: 9 ¾ செவ் 2 இல்
உயரம்: 163cm
தகைமை/தொழில்:Diplomaஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: B/9794

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 31 ½ சூரி செவ் 8 இல்
உயரம்: 170cm
தகைமை/தொழில்:A/L, London
எதிர்பார்ப்பு: வெளிநாடு PR
தொ.இ: B/9795

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்:சதயம் 3
கி.பா: 26செவ் 8 இல்
உயரம்: 167cm
தகைமை/தொழில்:Diplomaஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: B/9796

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 53
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, உப தபாலதிபர்
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம் /வெளிநாடு
தொ.இ: G/5424

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: 75
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:Computer Engineer,Canada
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/5429


பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா: 48 ½ செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L, உப தபாலதிபர்
எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்ததொழில் (உள்நாடு)
தொ.இ: G/5442

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா: 70 ¾ செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:BAபட்டதாரிஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம் /வெளிநாடு
தொ.இ: G/5445

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மைத்திரி - ரணில் பொறுப்புடன் இணைந்து செயற்பட வேண்டும்

## மகிந்தவின் சகா அறிவுரை



(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைகளுக்கு இவ்விருவரும் இணைந்தே தீர்வைக் காண வேண்டும்.


தேர்தலின் ஊடாக தீர்வு காண முடியும் என்று குறிப்பிடுவது அரசியல் கட்சிகளின் அரசியல் நோக்கமாகவே காணப்படும் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார். தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து தீர்வு காண வேண்டும். ஆனால் நடைமுறை யில் இத்தன்மை காணப்படுகின்றதா? என்பது சந்தேகமே. கடந்த காலங்களில் எவ்வாறு இரு அரசியல் தலைவர்களும் முரண்பட்டுக் கொண்டார்களோ அதன் தொடர்ச்சியே இன்றும் காணப்படுகின்றது.

பொதுத்தேர்தல், அல்லது ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக நெருக்கடிகளை எதிர்கொள்ளலாம் என்று குறிப்பிடுவது பொருத்தமற்றது. தற்போதைய நிலைமையை எத்தரப்பினரும் தமது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்வது முறையற்றதாகும். கடந்த அரசாங்கத்தை குற்றம்சாட்டி நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்காலத்தில் கடந்த அரசாங்கத்தின் ஊழல்வாதிகளையும் தண்டிக்கவில்லை. நடப்பு அரசாங்கத்தின் ஊழல்வாதிகளையும் தண்டிக்கவில்லை.

தற்போது இந்த அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்கள் அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# இலங்கையில் முதன் முறையாக தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகனம்



(கொழும்பு)

இலங்கையில் முதன் முறையாக அதிநவீன மோட்டார் வாகனம் ஒன்று தயாரிக்கப்பட்டது.

பேராசிரியர் ஹர்ஷ சுபசிங்கவின் வழிகாட்டலின் கீழ் 2014 ஆம் ஆண்டு இந்த மோட்டார் வாகனம் தயாரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மோட்டார் வாகனத்திற்காக பயன்படுத்தப்பட்ட பாகங்கள் அனைத்தும் 100 சதவீதம் இலங்கையிலேயே வடிவமைத்து தயாரிக்கப்பட்டுள்ளன.

மொரட்டுவை பல்கலைக்கழக பொறியியலாளர்களான ஷஷிரங்க டி சில்வா உள்ளிட்ட குழுவினர் நடவடிக்கை மேற்கொண்டு இதனை பூர்த்தி செய்தனர்.

இலங்கை நிபுணர்களின் கண்காணிப்பில் இந்த மோட்டார் வாகனம் முழுமையாக தயாரிக்கப்பட்டுள்ளது.


மின்சார சக்தியில் பயணிக்கும் இந்த மோட்டார் வாகனம் சுமார் 1500 கிலோகிராம் நிறையில் காணப்படுகின்றது. இந்த வாகனம் 3.6 நொடிப்பொழுதில் ஒரு கிலோ மீற்றர் தூரம் பயணிக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது. இதன் முழுமையான வேகம் மணிக்கு 240 கிலோ மீற்றராகும்.

இரண்டு பேர் மாத்திரம் பயணிக்கக்கூடிய வகையில் இந்த மோட்டார் வாகனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வமாக இந்த மோட்டார் வாகனத்தை இலங்கை சந்தையில் அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை களமிறக்கும் எண்ணமில்லையாம்

## எஸ்.பி.கூறுகிறார்



(கண்டி)

அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கும் எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பீடத்துக்கு இல்லை என்று ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காக தற்போதே பிரதான கட்சிகள் ஆயத்தமாகி வருகின்றன.

அந்தவகையில், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவார் எனப் பலராலும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையில், இந்த விடயம் தொடர்பாக கண்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே எஸ்.பி.திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“சஜித் பிரேமதாஸவின் பெயரோ, கரு ஜெயசூரியவின் பெயரோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவின் பெயரோ ஜனாதிபதி வேட்பாளருக்காக பரிந்துரைக்கப்படவில்லை.

ஆனால், எனக்குத் தெரிந்த வகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் என்று மட்டும் விளங்குகின்றது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தற்போது பாரிய எதிர்ப்பலைகளும் எழுந்துள்ளன.

எனவே, இதனால் அடுத்த தெரிவாக கரு ஜெயசூரியவை களமிறக்குவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

இதனைத் தவிர அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை களமிறக்கும் எண்ணம் அந்தக் கட்சிக்கு ஒரு போதும் இல்லை.


சஜித்திடம் அந்தப் பதவியைக் கொடுக்கும் அளவுக்கு அந்தக் கட்சியின் தலைவர்கள் எவரும் விரும்பவில்லை என்பதை அறிய முடிகிறது.

எம்மைப் பொறுத்தவரை யாரைக் களமிறக்கினாலும் நிச்சயமாக நாம் தோற்கடிப்போம். நாம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பாரிய வெற்றியடைவோம் என்பது மட்டுமே உறுதியாகக் கூறமுடியும்.

இதற்காக ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து சக்திமிக்க ஒருவரை வேட்பாளராகக் களமிறக்குவோம்.

அந்த வேட்பாளர் யார் என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நாம் ஒன்றிணைந்து தீர்மானிப்போம்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அச்சுவேலி-மூளாய் சிற்றூர்தி சேவை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்த வழித்தடம் 773 இலக்க மூளாய் அச்சுவேலிக்கான சிற்றூர்தி சேவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நேற்று முற்பகல் 10.30 மணியளவில் அச்சுவேலி பேருந்து நிலையப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த வழித்தடத்தினூடாக தட்டிவான் சேவையே நடத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் நாட்டிலேற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நீண்டகாலமாக தடைப்பட்டிருந்த மூளாய் - அச்சுவேலிக்கான போக்குவரத்து சேவையை மேற்கொள்ளும் வழித்தடம் 773 இலக்க தட்டிவான் சேவையை மீண்டும் சிற்றூர்தி சேவையாக மேற்கொள்வதற்கான அனுமதியை பெற்றுத்தருமாறு குறித்த தட்டிவான் உரிமையாளர் சங்க பிரதிநிதிகள் கடந்த மாசிமாதம் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த தட்டிவான் உரிமையாளர்களது வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக டக்ளஸ் தேவானந்தா துறைசார் தரப்பினருடன் பேச்சுக்களை மேற்கொண்டு அச்சேவையை மேற்கொள்வதற்கான அனுமதியை பெற்றுக் கொடுத்ததற்கிணங்க நேற்று உத்தியோகபூர்வமாக சிற்றூர்தி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட குறித்த மார்க்க போக்குவரத்து சேவை சுமார் 29 வருடங்களின் பின்னர் மீண்டும் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உதவிப் பொருட்கள் வழங்கல்






(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியின் ஏற்பாட்டில் உதவிப்பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி ஜும்மா பள்ளிவாசலில் இடம்பெற்றது. இதன் போது சாவகச்சேரியில் உள்ள 21 முஸ்லிம் குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. உதவிப் பொருட்களை யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி மற்றும் 523வது படைத்தளபதி கேணல் பெர்னாண்டோ ஆகியோர் வழங்கினர். (இ.-30)

## கோத்தபாய வேண்டாம்
# ஜனாதிபதி வேட்பாளராக சமல் சிறிய கட்சிகள் விருப்பம்- வாசு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாயவுக்கு பதிலாக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவே வேட்பாளராக வர வேண்டும் என பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகள் விரும்புகின்றன.

இந்த தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வெளியிட்டார்.

எனினும் சமல் ராஜபக்ஷ விரும்பாத வேளையில் அவருக்கு பதிலாக கோத்தபாய வேட்பாளராக நியமிக்கப்படலாம் என்று அவர் தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷவை பொறுத்தவரை அவர் வேட்பாளராக வருவதற்கு பெரமுனவில் எவரும் விருப்பமில்லை. அத்துடன் அவரும் அதனை விரும்பவில்லை.

இந்த நிலையில் சமல் ராஜபக்ஷவை பெரமுனவில் அங்கம் வகிக்கும் இடதுசாரிகள் உட்பட சிறிய கட்சிகள் விரும்புகின்றன என்று வாசுதேவ தெரிவித்தார்.

இதற்கிடையில் ஷிராந்தி ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருங்கிய தரப்பு விரும்புவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சாவகச்சேரி நகரசபைத் தவிசாளரின் தன்னிச்சையான செயற்பாடுகள் தொடர்பாக முன்னணி உறுப்பினர்கள் ஆளுநருக்கு கடிதம்

(சாவகச்சேரி )

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளரின் தன்னிச்சையான செயற்பாடுகள் தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் வடமாகாண ஆளுநர் கலாநிதி. சுரேன் ராகவனுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர். குறித்த கடிதத்தில் கடந்த வருட உள்ளூராட்சித் தேர்தலின் பிற்பாடு எமது சபையில் நடைபெற்ற, நடைபெற்று வருகின்ற செயற்பாடுகள் தொடர்பாக தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தர விரும்புகின்றோம். சபை ஆரம்பித்து ஒரு வருடம் கடந்த நிலையில் எமது பிரதேச அபிவிருத்தியில் பாரிய பொறுப்பற்ற தன்மை காணப்படுகின்றது. வருமானம் பெற வேண்டிய பல விடயங்களில் அசண்டையீனத்தைப் பின்பற்றுகிறார்கள்.

ஆளும் தரப்பினர் வருமானம் இன்மையைக் காரணம் காட்டி அபிவிருத்திகளைப் பின்னடிப்புச் செய்கிறார்கள். குறிப்பாக நகரசபையின் பெரும் வருமான முதலாக சாவகச்சேரி பொதுச் சந்தையே காணப்படுகிறது. ஆனால் அதனை குத்தகைக்கு வழங்காமல் சபையே நடத்துவதால் பாரிய நட்டம் ஏற்பட்டு வருகின்றது. அத்துடன் சந்தையில் கடமை யாற்றுகின்ற நிரந்தர உத்தியோகத்தர்கள் நகரசபையில் வேறு தேவைகளுக்காக உள்வாங்கப்பட்டவர்கள். சந்தையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுபவர்களும் நிதி கையாளுதலில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொண்டு கடந்த வருடமே (2018) நாம் சந்தையைக் குத்தகைக்கு வழங்குமாறு தீர்மானம் ஒன்றைச் சபையில் நிறைவேற்றி இருந்தோம். ஆனால் ஒருசில உறுப்பினர்கள் தமக்கு மூன்று மாத கால அவகாசம் வழங்குமாறும், அந்த மூன்று மாத காலத்திற்குள் சந்தையின் வருமானத்தை உயர்த்திக் காட்டுவதாகவும் வாக்குறுதியளித்திருந்தனர்.

அவ்வாறு வருமானத்தை உயர்த்த முடியாது விட்டால் குத்தகைக்கு வழங்கும் தீர மானத்திற்கு ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தனர். ஆனால் அந்த மூன்று மாத காலத்தில் எந்தவொரு முயற்சியும் எடுக்காமல் இழுத்தடிப்புச் செய்தனர். நாம் சந்தை வருமானத்தை உயர்த்த பல வழிவகைகளைக் கூறியும் அவர்கள் அதனைச் செவிமடுக்கவில்லை. இந்நிலையில் கடந்த சித்திரை மாத சபைக் கூட்டத்தில் சந்தையை குத்தகைக்கு வழங்குவதாக சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குத்தகை வழங்கலுக்கான பத்திரிகை விளம்பரமும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் நகரசபையின் தீர்மானத்தை எதிர்ப்பதாகக் கூறி சந்தை வியாபாரிகள் சிலர் கடையடைப்புச் செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக சபைத் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்வதாகக் கூறி தவிசாளரால் விசேட கூட்டம் நடத்தப்பட்டது. அந்த விசேட கூட்டத்தில் சந்தையைக் குத்தகைக்கு வழங்குவது என்ற சபைத் தீர்மானம் முறையற்ற விதத்தில் மாற்றியமைக்கப்பட்டு சந்தையைக் குத்தகைக்கு வழங்குவதில்லை என முடிவெடுத்தனர்.

இதனால் முன்னணி உறுப்பினர் அறுவரும் உடனடியாக சபையில் இருந்து வெளிநடப்புச் செய்து உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர்கள் ஆகியோரிடம் இது தொடர்பாக முறையிட் டிருந்தோம். ஆனால் எமது முறைப்பாட்டை அலட்சியம் செய்வது போன்றதொரு செய்தி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டதாகக் கூறி பத்திரிகை ஒன்றில் வெளியாகி எம்மை விரக்தியடைய வைத்தது.

எனவே செய்வதறியாது மன விரக்தியுடன் செயற்படும் எமக்கு தங்களின் அண்மைய கால செயற்பாடுகள் நம்பிக்கை தந்துள்ளன. இதன் காரணமாக தங்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்துள்ளோம். இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் பேசியும், நேரடியாக தாங்கள் இதனைப் பார்வையிடும் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் மற்றும் அபிவிருத்திகளைக் கிடைக்கச் செய்ய உறுதுணை புரியுமாறு வேண்டிக்கொள்கிறோம் என அவர்கள் தமது முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவித்தனர்.

மேலும் வரி வசூலிப்பாளர்கள் பணத்தை கொள்ளையடிப்பதையும், வரி அறவீட்டாளர்களில் உள்ள குறைபாட்டைப் பயன்படுத்தி வியாபாரிகள் வரி கட்டாமல் இருப்பதையும் எம்மால் பார்த்துக்கொண்டிருக்க முடியாதுளனவும்தெரிவித்தனர். (இ-30)


பழைமை வாய்ந்த
## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



+ ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
+ பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
+ கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
+ காணி விற்பனையில் பிரச்சினையா?
+ வியாபார முன்னேற்றம்
+ வீட்டில் ஒற்றுமை உண்டாக
+ பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்


ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தென்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# குறை'களை' பதிகம் 43
## நஞ்சை உணவாய் உண்ணும் இதுதான் நம் வாழ்வோ?



கோதுமை குரக்கன்
சாமை தினை என
விதைத்து உழவு செய்து
உண்டோம் நூறு வயது வரை
வாழ்ந்தோம் அந்நாளில்

ஆரோக்கிய உணவுகளும்
வியர்வை சிந்தும் வேலைகளும்
எம்முன்னோர் வாழ்வை
முழுமை பெற வைத்தது

கொத்து ரொட்டி என்ற
கொடிய தொன்று வந்தது
வாழ்விழந்து வதைபடுகிறோம் இன்று

கோதுமை மாவொன்று மனிதர்க்கு
கூற்றனாய் வந்தது
அமெரிக்கன் மாவென்று
பெருமை கொண்டு தின்று
ஊதிப்பெருத்து நிற்கிறோம்

காலையிலே குரக்கன் பிட்டுண்டு
மதியவேளை கைக்குத்தல்
அரிசியிலே சோறுண்டு
இதமான இரவினிலே
மரவள்ளிக் கிழங்குண்டு
வாழ்ந்த எம்பரம்பரையை மறந்து

காலை, மதியம், இரவு என்று
கோதுமை உணவுகளை உண்டு
எதைக்கண்டோம்
உடல் ஊதிப் பெருத்து
சலரோகத்தை விலைக்கு வாங்கி
இரத்த அழுத்தம் உச்சி ஏற
பிரசர் பிரசர் என்று
மருந்து மாத்திரையுடன்
அழுகிறோம் அலைகிறோம்

அன்பார்ந்த என்னினமே!
நஞ்சென்று தெரிந்தும்
கோதுமையைக் கொட்டி
பணம் சேர்க்கும் பாதகம் வேண்டாமே

மனிதர்க்கு நஞ்சாகும்
நாசமதைத் தூக்கி எறிவோம்
அரிசி மாவிலும் குரக்கன் மாவிலும்
கொத்துரொட்டி கொத்திடுவோம்
புதுப் புரட்சி செய்வோம்
எம் அடுத்த சந்ததியை
நோய் நொடியின்றிக் காத்திடுவோம்

மாவை. நா.கஜேந்திரன்

# யாழில் கலைஞர்களுக்கு நிதி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கலைஞர்களை ஊக்குவிப்பதற்கான நிதியொதுக்கீடு கிடைக்கப்பெற்றதாக யாழ். மாவட்ட கலாசார திணைக்கள உத்தியோகத்தர் எஸ்.கிஷ்ணகுமார் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சால் கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்களுக்கூடாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து 130 கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு நிதியொதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இதில் கலைஞர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கான நிதி வழங்கும் நிகழ்வு இம்மாத இறுதியில் இடம்பெறும் என அவர்மேலும்தெரிவித்தார். (இ-10)

# நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிலத்தை அபகரிக்கும் நோக்குடன் பொசன் வழிபாட்டுக்கு வந்த சிங்கள மக்கள்







முல்லைத்தீவு பழைய செம் மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் அடாத்தாக அமைக் கப்பட்டுள்ள குருகந்த ரஜமஹா விகாரைக்கு கொழும்பு அநு ராதபுரம் வெலிஓயா பகுதியிலி ருந்து மூன்று பேருந்துக்களில் அழைத்துவரப்பட்ட சிங்கள மக் கள் ஈடுபட்டிருந்தனர்.

தேசிய உரிமைகள் இயக் கத்தின் தலைவர் பெங்கமுவே நாலக தேரர் தலைமையில் 5 க்கும் மேற்பட்ட பிக்குகள் மற்றும் 200 க்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் அங்கு சத்தியாக்கிரக போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

குறித்த சிங்கள மக்கள் மத் தியில் உரையாற்றிய பௌத்த பிக்குகள், அதாவது இந்த பகுதி யில் பிள்ளையார் ஆலயம் இருந் ததாக தமிழ் மக்கள் பொய்களை கூறிவருவதாகவும் இங்கே குரு கந்த ரஜமஹா விகாரை என்ற விகா ரையே பல ஆண்டுகளாக இருந் ததாகவும் ஆனால் இப்போது அந்த விகாரையில் வழிபட முடி யாத சூழல் ஏற்படுத்தப்பட்டுள் ளதாகவும் தெரிவித்துள்ளனர்

இந்த சர்சைக்குரிய ஆலயப் பகுதியில் இரண்டு தரப்பினரும் அமைதிக்கு பங்கமின்றி வழி பாடுகளை மேற்கொள்ளமுடியும் என முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்று கடந்த மே மாதம் 6 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் இரண்டாவது தட வையாகவும் பௌத்த பிக்கு களால் சிங்கள மக்கள் அழை த்து வரப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (9-281)

## வரட்சியால் வற்றிய வவு.மூனாமடு குளம்

# வகை தொகையின்றி இறக்கும் மீன்கள்

### பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பாதிப்பு





(குருமன்காடு)


வவுனியா, புதுக்குளம், மூனா மடுக் குளத்தின் நீர் வற்றியதால் மீன்கள் அதிகளவில் இறப்பது டன் குளத்தை நம்பி விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட விவ சாயிகள் கடும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர்.

வவுனியாவில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரண மாக குளத்து நீர்மட்டம் சடுதியாக குறைவடைந்து வருகின்றது. இந்நிலையில் புதுக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நீர்ப்பா சன திணைக்களத்தின் கீழ் உள்ள மூனாமடுக் குளத்தின் நீரும் வற்றிய நிலையில் மீன்கள் இறந்து துர்நாற்றம் வீசுவதுடன், அதன் கீழான விவசாய நடவடிக் கைகளும் பாதிப்படைந்துள்ளது.

மூனாமடு குளத்தின் கீழ் காணப்படுகின்ற 230 ஏக்கர் வயல் காணிகளில் சிறுபோகத்திற்காக 45 ஏக்கர் செய்கை பண் ணைப்பட்டுள்ளது. குறித்த குளத்தின் நீர் வரத்துக்கேற்ப 30 ஏக்கரில் செய்கை பண்ண வேண்டிய நிலையில் 45 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டு நீர் விநியோகிக்கப் பட்டமையாலும், வரட்சி காரண மாகவும் குறித்த குளத்தின் நீர் மட்டம் குறைவடைந்து அக்குள த்து மீன்கள் இறந்து வருகின்றன. கால்நடைகளும் நீர்இன்றி அவ திக்குள்ளாகியுள்ளன.

குறித்த குளத்தின் கீழ் 45 ஏக்கர் விவசாயம் செய்கை பண்ணப் பட்டுள்ளது. இக்குளத்தின் கீழ் 72 பங்காளர்கள் உள்ளனர். வரட்சி காரணமாக வயல் நிலங்களு க்கான நீரும் விரைவாக வற்றிப் போவதால் குளத்தில் இருந்து நீரை இறைத்து பயன்படுத்தப்படுகின் றது. இன்னும் அறுவடைக்கு ஒரு மாதகாலமே உள்ள நிலையில் வயல்களுக்கு நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வயல் நிலங்க ளுக்கு தேவையான நீரை குள த்தில் இருந்து இறைத்து விநி யோகித்தோம். தற்போது நீர் இல்லாமையால் வயல் நிலங்கள் பாதிப்படைந்து வருகின்றன. எமது வயல்களை பாதுகாத்து வாழ் வாதராத்திற்கு உதவ அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விசாயிகள் கோரிக்கை விடு த்துள்ளனர். சில விவசாயிகள் பவுசர் மூலமும் வேறு இடங்களில் இருந்து நீரைக் கொண்டு வந்து தமது வயல்நிலங்களுக்கு பாய்ச்சி வருகின்றனர்.

இதேவேளை, குறித்த குளத் தின் நீர்மட்டத்திற்கு அதிகமாக நீர் இறைத்து பயன்படுத்தப்பட்ட மையால் குளத்து நீர் விரைவாக வற்றியுள்ளதாகவும், நீர் வற்றி யமையால் மீன்களுக்கான ஒட் சிசன் இல்லாமையால் மீன்கள் இறந்து வருவதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித் துள்ளார். இந்நிலையில் இறந்த மீன்களை சுகாதார பரிசோத கர்களின் துணையுடன் புதைக் கும் நடவடிக்கைளும் இடம்பெறு கின்றன. (9-250)




## முதியோர் மேம்பாட்டு அலுவலரை நியமிக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்துக்கு முதியோர் மேம்பாட்டு அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு மாவ ட்ட முதியோர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முதியோருக்கான தேசிய செயலகத்தால் தேசிய ரீதியில் பலவிதமான செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வரு கின்றன.

தற்போது இதனை மேலும் வலுவூட்டும் வகையிலான செயற் றிட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி வசதிகளை மாவட்ட பிரதேச செயலக மட்டங்களுக்கு வழங்கு வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் கிளிநொச்சி மாவட்ட த்திற்கென முதியோர் மேம்பாட்டு அலுவலர் எவரும் நியமிக் கப்ப டாத நிலையில் தற்போது அபி விருத்தி அலுவலர் ஒருவரே இம் மாவட்டத்தின் முதியோர் நலன் பேணல் நடவடிக்கையை மேற் கொண்டு வருகிறார்.

கிளிநொச்சி மாவட்டம் திறன் அபிவிருத்தி செயற்பாட்டில் சிறப் பாக இயங்குவதாகத் தேசிய மட்டத்தில் பரிசுபெற்றுள்ள நிலை யிலும் பல முதியோர் சங்கங்கள் நல்லமுறையில் இயங்கிவரும் நிலையிலும் இம்மாவட்ட முதி யோர்களின் நலனை மேலும் உயர்வடையச் செய்ய முதியோர் மேம்பாட்டு அலுவலர் ஒருவரை இதுவரை நியமனம் செய்ய நடவ டிக்கை எடுக்காதது ஏன் என முதி யோர்களால் கேள்வி எழுப்பப் படுகிறது.

எனவே தற்போது முதியோர் களுக்கான பலதரப்பட்ட உதவித் திட்டங்கள் தேசிய முதியோர் செயலகத்தால் கிடைப்பதற்கான வாய்ப்புகள் தென்படுவதால் கிளி நொச்சி மாவட்ட அரச அதிபர் மற் றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகா ரிகள் இவ்விடயத்தில் உடனடிக் கவனமெடுத்து முதியோர் மேம் பாட்டு அலுவலர் ஒருவரை நியம னம் செய்வதுடன் மாவட்டரீதியில் நல்ல முறையில் இயங்கக் கூடிய தான முதியோர் சங்க மாவட்ட புதிய நிர்வாகத் தெரிவையும் ஏற்படுத்தி உதவவேண்டுமென இம் மாவட்ட முதியோர் அமைப் பினர் வேண்டுகோள் விடுத்து ள்ளனர். (9- 254)


## எல்லைக்கிராமங்களில் உயிர் நீத்தவர்களின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம்

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட தமிழர்கள் வாழும் எல்லைக்கிராமங்களான மருதோடை, ஊஞ்சல்கட்டி, வெடிவைத்தகல்லு, புளியங்குளம், காஞ்சிரமோட்டை போன்ற கிராமங்களில் உயிரிழந் தவர்களின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் நினை வுக்கிண்ணம் இந்த வருடமும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருதோடை சென்சுடர் விளையாட்டுக்கழகம் நடத்தும் குறித்த மென்பந்து சுற்று நினைவுக்கிண்ணமானது இந்த மாதம் 22,23 ஆம் திகதிகளில் மருதோடை சென்சுடர் விளையாட்டுக் கழக விளையாட்டு மைதா னத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அணிக்கு 11பேர் கொண்ட 8அணிகள் பங்குபெறும் லீக் முறை யிலான குறித்த மென்பந்து சுற்று ப்போட்டியில் வெற்றிபெறும் 1 ஆம்,2ஆம் அணிகளுக்கு பெறும தியான வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும் எனவும் அறிவி க்கப்பட்டுள்ளது. (9)

## சிறுபோக நெற்செய்கையின் அறுவடைகள் ஆரம்பம்



(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறு போக நெற்செய்கையின் அறுவ டைகள் தற்போது முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றாகக்காணப்படுகின்ற அக்க ராயன்குளத்தின் கீழ் இவ்வாண்டு 2790 ஏக்கர் சிறுபோக நெற் செய்கையும் 466 ஏக்கர் உப உணவுச்செய்கையும் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறு போக நெற்செய்கையின் அறு வடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகள் நிலவிய கடும்வறட்சி காரண மாக கடந்த காலபோகச் செய்கை பாதிக்கப்பட்டதுடன் சிறுபோக செய்கை முழுமையாக மேற்கொ ள்ள முடியாது காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த டிசெம பர் மாதம் பெய்தகடும் மழை யினால் அக்கராயன்குளத்தின் நீர் மட்டம் முழுமையடைந்து போதியளவு நீர் காணப்பட்ட நிலையில் 2790 ஏக்கர் நெற செய்கையும் 466 ஏக்கர் சிறு தானியச்செய்கையும் மேற் கொள் ளப்பட்டு இவ்வாறு அறுவடை ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (9-315)

## காற்றினால் வீடுகள் சேதம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாங்குளம் பிரதேசத்தில் வீசிய பலத்த காற்றின் காரணமாக வீட்டின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை பகல் திடீரென வீசிய காற்றினால் இப்பகுதியிலுள்ள இரண்டு வீடு களின் கூரைகள் தூக்கி வீசப் பட்டுள்ளன.

குறித்த வீடுகளின் பாதிப்புக்கள் தொடர்பில் பிரதேச செயலர், கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதேபோன்று கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இப் பகுதியில் வீசிய கடும் காற்றினால் பல வீடுகளின் கூரைகள் சேத மடைந்துள்ளன.

இவ்வாறு சேதமடைந்த வீடுகளுக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செய லகத்தினால் உடனடி உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், சேதமடைந்த வீடுகளை திருத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (9-315)

# பேராறு பகுதியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகாரிகள் அசமந்தம் என மக்கள் விசனம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவின் பேராறு கிராம அலுவலர் பிரிவு பகுதியிலேயே காணப்படுகின்ற பேராற்றில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த இடத்திலே எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் மணல் அகழ்ந்து எடுக்கப்படுகின்றது. ஆற்றங்கரையிலே குவித்து வைத்து விட்டு இரவு வேளையிலேயே சட்டவிரோதமாக வாகனங்களில் ஏற்றி வெளி இடங்களுக்குக் கொண்டு செல்வதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

இருப்பினும் குறித்த நடவடிக்கை தொடர்பில் சம்பந்தப்பட்ட எந்த ஒரு திணைக்கள அதிகாரிகளோ அல்லது பொலிஸாரோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் குறித்த பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளார்கள்.

எனவே குறித்த பகுதியில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையை பொலிஸார் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுத்து நிறுத்தி தங்களுடைய இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கு ஒத்தாசை வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-281)



# வவுனியா-மன்னார் வீதி போக்குவரத்துக்கு தடை

## பயணிகள் அசௌகரியம்



வவுனியா-மன்னார் வீதியில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை ஏற்படுத்திய குழியால் போக்குவரத்து மேற்கொள்வதில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் வவுனியா பிரதேசத்தில் வீதியோரங்களில் குழிகள் தோண்டப்பட்டு நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் நேற்று முன்தினம் இரவு குளுமாட்டுச்சந்திக்கு அண்மையில் வவுனியா-மன்னார் வீதிக்கு குறுக்காக குழாய் பொருத்துவதற்காக பாரிய குழி தோண்டப்பட்டு வேலை முடிவடையாமையினால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

வவுனியா-மன்னார் பிரதான வீதி அதிகளவான போக்குவரத்து நிறைந்த வீதியாகக் காணப்படும் நிலையில் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் குழாய் பொருத்துவதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டிருக்க வேண்டிய நிலையில் மாற்று வீதி தொடர்பான ஒழுங்கான தெளிவூட்டல்கள் கூட வழங்கப்படாமல் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை குறித்த வேலையை மேற்கொண்டிருக்கின்றமை தொடர்பில் பயணிகள் விசனம் தெரிவித்தனர். (9-250)

# ஈரோஸ் அமைப்பின் கிளை அலுவலகம் திறப்பு



(பனிக்கன்குளம்)

ஈழப்புரட்சி (ஈரோஸ்) அமைப்பின் வடக்கிற்கான மூன்றாவது கிளை அலுவலகம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு சிலாவத்தை மாதிரிக் கிராமம் பகுதியில் அமையப்பெற்ற இந்த அலுவலகத் திறப்பு நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட ஈரோஸ் அமைப்பின் செயற்பாட்டாளர் ஜயாமணி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஈழப்புரட்சி அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளர் றாஜேந்திரா, அமைப்பின் மூத்த உறுப்பினர் நேசரட்ணம், ஈழப்புரட்சி அமைப்பின் தோழர்களான அருளப்பு ராசநாயகம், மலையக மக்கள் இணைப்பாளர் தோழர் ஜீவன், மூத்த உறுப்பினர் திருச்செல்வம் உள்ளிட்ட அமைப்பின் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர். (9-281)

# கிளி.ஜேர்மன் பயிற்சி நிறுவனம் நெருக்கடிகளால் மூடப்படும் அபாயம்

(பரந்தன்)

2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் (SLGT) திறமையற்ற நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் ஆளணிப் பற்றாக்குறை போன்றவற்றால் மூடப்படும் அபாயம் இருப்பதாக கல்வியியலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த பயற்சி நிறுவனத்துக்கு என பெரிய அளவிலான காணிகள் ஒதுக்கப்பட்டு நவீன வசதிகளுடன் கூடிய துறைசார் விரிவுரை மண்டபங்கள் மற்றும் வெளி மாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் மேற்படி இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது.

மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற தவணைப் பரீட்சைகள் கூட திட்டமிட்ட வகையில் நேரசூசிக்கு அமைவாக நடைபெறுவதில்லை. தாமதமாக நடைபெற்ற பரீட்சைப் பெறுபேறுகள் கூட ஆறு மாதங்களின் பின்னரே மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதனால் சித்தி பெறாத மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மூன்று வருடங்களாக இயங்கி வருகின்ற இந்த நிறுவனத்தில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு இதுவரை தொழில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

மேலும் இந்த வருடம் உள்வாங்கப்பட்ட மாணவர்களில் 50 வீதமான மாணவர்களே கல்வி கற்கின்றனர். இவ்வாறான பிரச்சினைகள் மற்றும் ஆளணிப் பிரச்சினைகளால் மீதி 50 வீதமானவர்கள் கற்றல் செயற்பாடுகளை கைவிட்டுள்ளனர். இவ் இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் ஆரம்பிக்கப்படும் போது சுமார் 90 விரிவுரையாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட போதும் இப்பொழுது 40 விரிவுரையாளர்களே கடமையில் உள்ளனர்.

குறித்த நிறுவன அதிபராக ஜேர்மன் நாட்டவர் ஒருவர் பணியாற்றி வருகின்ற போதும் இவ்வாறான சூழ்நிலைகளை கையாளக் கூடிய அதிகாரம் அவருக்கு வழங்கப்படவில்லை. இதனை நிர்வகிப்பது தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) குறித்த அதிகாரசபையே இவ்வளவு பிரச்சினைகளையும் சரி செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.

இவ் விடயங்கள் தீர்க்கப்படாது போனால் இப் பயிற்சி நிறுவனம் மூடப்படும் அபாயம் உள்ளது. எனவே இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகள் உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு கல்வியியலாளர்கள் மற்றும் குறித்த பயிற்சி நிறுவன மாணவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (9-312)

# வவுனியா உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பால்நிலை சமத்துவம் தொடர்பான செயலமர்வு



வவுனியா மாவட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு பால்நிலை சமத்துவ பொறுப்புடனான பாதீடு தொடர்பான செயலமர்வு வவுனியா, மில் வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ட்ரான்ஸ்பரென்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கான செயலமர்வுக்கு வவுனியா நகரசபை, வவுனியா செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபைகளைச் சேர்ந்த 15 இற்கு மேற்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இச் செயலமர்வின் விரிவுரையாளராக நளினி ரத்னராஜா கடமையாற்றியதுடன், ட்ரான்ஸ்பரென்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் முகாமையாளர் சட்டத்தரணி மங்களா சங்கர், நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் எம்.எச்.எம்.மக்கீன், சட்ட உத்தியோகத்தர் அஞ்சனா விக்ரம ஆராய்ச்சி ஆகியோர் கலந்து கொண்டு வழிநடத்தியிருந்தனர். (9-250)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்




யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியாக பின்தங்கிய பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உட்பட 15 பெண்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு வரும் முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கத்துக்கு 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நெசவிற்கான நூல்கள் வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் சுய தொழிலை ஊக்குவிக்கும் வகையில், 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தூள் அரைப்பதற்கான மூலப்பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (9)

# இராணுவத்தினரின் ஏற்பாட்டில் வடக்கில் பொசன் நிகழ்வுகள்







பொசன் போயா தினத்தினை முன்னிட்டு வடக்கில் பல்வேறு பகுதிகளில் கண்காட்சிகளும் தானசாலைகளும் இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு பொதுவிளையாட்டு மைதானம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை பொது விளையாட்டு மைதானம், ஒட்டுசுட்டான் நகர்ப்பகுதியில் வெசாக்கூடுகள் கண்காட்சி மற்றும் தானசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. வவுனியா மணிக்கூட்டு சந்தியடியிலிருந்து ஏ-9 வீதியில் அமைந்துள்ள வன்னி இராணுவ முகாம் வரையிலான பகுதி இராணுவத்தினரால் அலங்காரம் செய்யப்பட்டு ஏ-9 வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ போதிதக்கினாராமய பௌத்த விகாரையில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்றும் இன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதான பாலத்தடியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை தானசாலை அமைக்கப்பட்டு தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் சர்வமதத் தலைவர்கள் கலந்து கொண்டனர். (9-250-281-265)

# பாரதம்

## பீகாரில் பரவிவரும் மூளைக்காய்ச்சல் பலி எண்ணிக்கை 80 ஆக அதிகரிப்பு!



(பாட்னா)

பீகார் மாநிலத்தில் மூளைக் காய்ச்சலுக்குப் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ள நிலையில் மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் நேற்று முன்தினம் முசாபர்பூர் வைத்தியசாலைக்குச் சென்று ஆய்வு செய்தார்.

பீகார் மாநிலத்தில் குழந்தைகளை தாக்கும் மூளைக் காய்ச்சல் நோய் பரவி வருகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து அங்கு நோய் பரவியது.

இதில் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் வரை 11 பேர் உயிரிழந்திருந்தனர். ஆனால் இப்போது திடீரென இதன் தாக்கம் மேலும் அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு வரை 43 குழந்தைகள் பலியாகி இருந்தனர். நோய் பாதிப்பால் 117 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

'அக்யூட் என்சபிலிட்டிஸ் சிண்ட்ரோம்' மற்றும் 'ஜப்பான் என்சபிலிட்டிஸ்' என இருவகையான மூளைக்காய்ச்சல் பரவி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் முசாபர்பூர் பகுதியில் அக்யூட் என்சபிலிட்டிஸ் சிண்ட்ரோம் மூளைக்காய்ச்சலும் கயா பகுதியில் ஜப்பான் என்சபிலிட்டிஸ் மூளைக்காய்ச்சலும் பரவியுள்ளது. இந்நிலையில் மூளைக்காய்ச்சலுக்குப் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது. (7)

## கடுமையான வெயிலுக்கு ஒரே நாளில் 45 பேர் பலி

(பாட்னா)

பீகார் மாநிலத்தில் சுட்டெரித்து வரும் கடும் வெயிலைத் தாங்க முடியாமல் ஒரே நாளில் 45 பேர் பலியாகினர்.

தென்மேற்குப் பருவ மழை ஆரம்பித்து பல மாநிலங்களில் மழை பெய்து வரும் நிலையிலும் நாட்டின் பல மாநிலங்களில் கடும் வெயில் நிலவி வருகிறது. வட மாநிலங்களில் கடுமையான வெயில் தாக்கம் உள்ளது.

இந்நிலையில், பீகார் மாநிலம் அவுரங்காபாத் மாவட்டத்தில் சுட்டெரிக்கும் கடுமையான வெயிலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 45 பேர் பலியாகியுள்ளனர்.

இதுதொடர்பாக, சதார் மருத்துவமனை டாக்டர் சுரேந்திரகுமார் சிங், வெயில் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட 45 பேர் நேற்று முன்தினம் பிற்பகல் சிகிச்சை பலனின்றி இறந்தனர். மேலும் 10 பேர் கவலைக்கிடமான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். (7)

## இந்தியாவில் பயங்கரவாதத்தை ஒடுக்க புதிய கண்காணிப்பு குழு உருவாக்கம்

பயங்கரவாதத்தை ஒடுக்க புதிய கண்காணிப்புக் குழுவொன்றை மத்திய உள்துறை அமைச்சகம் உருவாக்கியுள்ளது.

இதன்படி குறித்த குழுவில் குற்றப்புலனாய்வு, தேசிய புலனாய்வு அமைப்பு, வருமானவரித்துறையின் புலனாய்வு அமைப்புகள் மற்றும் அமுலாக்கத்துறையின் உறுப்பினர்கள் ஆகியோர் இடம்பெறுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த குழுவானது ஜம்மு - காஷ்மீர் மாநிலம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் நிலவும் பயங்கரவாதச் செயற்பாடுகளை தடுக்க உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மைக் காலங்களில் ஜம்மு - காஷ்மீரில் இடம்பெற்ற புல்வாமாத் தாக்குதலை அடுத்து இந்தப் பகுதியில் பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.


இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடி பயங்கரவாதத்திற்கு எதிராக உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என்று கிர்கிஸ்தானில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## புல்வாமாவில் மீண்டும் தாக்குதல் நடத்த திட்டம்; பாகிஸ்தான் அறிவிப்பால் பாதுகாப்பு தீவிரம்

(ஜம்மு)

ஜம்மு காஷ்மீர் - புல்வாமா பகுதியில் பயங்கரவாதத் தாக்குதலொன்றை நடத்துவதற்கு. தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக பாகிஸ்தான் எச்சரிக்கை விடுத்துள்ளமையினால் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் காஷ்மீர் மாநிலம்- ட்ராலில், அல்-கொய்தா தீவிரவாத இயக்கத்தின் ஒரு பிரிவான அன்சார் காஸ்வத் அமைப்பின் தளபதி ஜாகிர் மூசா கொல்லப்பட்டார்.



இந்நிலையில் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், புல்வாமா - அவந்திப்போரா வீதியில் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதரகத்துக்கு அந்நாடு தகவல் வழங்கியுள்ளது. (7)

### ஹொங்கொங்கில் போரா

## கைதிகள் பரிமா கைவிடப்பட்டது



(ஹொங்கொங்)

சர்ச்சைக்குரிய சட்டமூலம் கைவிடப்படுவதாக ஹொங்கொங் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஹொங்கொங்கில் முக்கிய வழக்குகளில் கைது செய்யப்படுபவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி. வழக்கு விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் கைதிகள் பரிமாற்றச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர ஹொங்கொங் நிர்வாகம் தீர்மானித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து, குறித்த உத்தேசக் கைதிகள் பரிமாற்ற சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஹொங்கொங்கில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த சட்டமூலத்தை கைவிடுவதாக ஹொங்கொங் ஜனாதிபதி கேரி லாம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், 'எங்கள் நடவடிக்கையில் இருந்த குறைபாடுகள் மற்றும் வேறு பல காரணிகள் சர்ச்சைகளை தூண்டிவிட்டதற்கு நான் ஆழ்ந்த துக்கத்தையும் வருத்தத்தையும் தெரிவிக்கின்றேன்.



### எண்ணெய் கப்பல்கள்

## பின்னணியில் ஈரான் இரு எதிர்பாராத விளைவுகள


### பிரிட்டன்



(லண்டன்)

ஓமான் வளைகுடாவிற்கு 100 பிரித்தானிய கடற்படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்களில் தெரியவந்துள்ளது.

ஓமான் வளைகுடா பகுதியில் பயணித்த நோர்வே மற்றும் சிங்கப்பூருக்கு சொந்தமான எண்ணெய் கப்பல்கள் மீது கடந்த வியாழக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது.



## ரஷ்ய ஏவுகணைக் கட்டமைப்பை கொள் அமெரிக்காவுடனான உறவில் விரிசல்


ரஷ்ய ஏவுகணைக் கட்டமைப்பை இந்தியா கொள்வனவு செய்தால், அமெரிக்காவுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்படுமென அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

ரஷ்ய ஏவுகணைக் கட்டமைப்பை இந்தியா கொள்வனவு செய்யவுள்ளதாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் முன்னாள் பேச்சாளரும் கனடா மற்றும் தென்கொரியாவின் முன்னாள் இந்திய தூதுவருமான விஷ்ணு பிரகாஷ் அண்மையில் தெரிவித்திருந்தார். இந்நிலையிலேயே ட்ரம்ப் நிர்வாகத்தினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.




## ாட்டங்களின் எதிரொலி

# ற்ற சட்டமூலம்
# து - ஜனாதிபதி



இந்தச் சட்டமூலம் நிறை வேற்றப்பட்டால், சீனாவின் செல்வாக்கு அதிகமாகிவிடும் என்று போராட்டக்காரர்கள் கவலை தெரிவிக்கின்றனர். அரசாங்கம் இது குறித்து நிதானமாக யோசிக்கும். அமைதி நிலையை மீண்டும் கொண்டு வருவதே தற்போது ஹொங்கொங்கின் முதன்மையான நோக்கம்' என மேலும் தெரிவித்துள்ளார். (7)

## ள் மீது தாக்குதல்

# நப்பது நிரூபிக்கப்பட்டால்
# ளை சந்திக்க நேரிடும்

## மிரட்டல்



இதனைத் தொடர்ந்து குறித்த பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளதுடன், ஈரான் இராணுவத்தினராலேயே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. எனினும் குறித்த குற்றச்சாட்டுக்களை ஈரான் அரசாங்கம் மறுத்துள்ளது.

இந்தநிலையில் பிரித்தானியக் கப்பல்களைப் பாதுகாப்பதற்காக 100 சிறந்த கடற்படையினரை பிரித்தானிய அரசாங்கம் ஓமான் வளைகுடாவிற்கு அனுப்பி வைத்துள்ளது.

இதுகுறித்து பிரித்தானிய வெளியுறவு செயலாளர் ஜெரமி ஹன்ட் தெரிவிக்கையில், 'கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இரட்டைத் தாக்குதல்களுக்குப் பின்னால் ஈரான் இருப்பது நிரூபிக்கப்பட்டால் எதிர்பாராத விளைவுகளை ஈரான் சந்திக்கும்' என எச்சரிக்கை விடுத்துள்ளார். (7)

## ள்வனவு செய்தால்
## ஏற்படும்

மேலும், இந்திய யுத்த செயற்பாடுகளுக்கு தேவையான அனைத்து புதிய யுத்த தொழில்நுட்பத்துடனான ஒத்துழைப்பையும் அமெரிக்காவினால் வழங்க முடியும் எனவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகையால் ரஷ்யாவிடமிருந்து S400 ரக ஏவுகணையை இந்தியா கொள்வனவு செய்ய முயற்சித்தால் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகளில் இடையூறு ஏற்படுமென அஞ்சப்படுகின்றது.

இந்நிலையில், அண்மைக் காலமாக பூகோள அரசியல் நலன் சார் விடயங்களில் அமெரிக்காவுடன் சமரசப் போக்கை கடைப் பிடித்து வருகின்ற இந்தியா, இவ்விடயத்தில் அமெரிக்காவின் எச்சரிக்கையை எவ்வாறு கையாளப் போகின்றது என்பதே சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. (7)

# சோமாலியாவில் கார்க்குண்டுத் தாக்குதல்
# 12 பேர் உடல் சிதறி உயிரிழப்பு!

(மொகாடிஷு)

சோமாலியா தலைநகர் மொகாடிஷுவில் உள்ள பாராளுமன்றம் அருகே நேற்று பயங்கரவாதிகள் நடத்திய கார்க்குண்டு தாக்குதலில் 12 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

அல்கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் ஆதரவாளர்களாக சோமாலியா நாட்டில் இயங்கி வரும் அல் ஷபாப் பயங்கரவாதிகள் அவ்வப்போது வன்முறைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.



அவ்வகையில், சோமாலியா தலைநகர் மொகாடிஷு நகரில் உள்ள பாராளுமன்றம் அருகே ஒரு பிரதான வீதியில் நேற்று பயங்கரவாதிகள் நடத்திய கார்க்குண்டு தாக்குதலில் 12 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். உயிரிழந்த 12 பேரும் கென்யா நாட்டை சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் என்று தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த சுமார் 10 பேர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (7)

# காருடன் மினி பஸ் மோதல்
# 8 பேர் பரிதாபமாக மரணம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் கார் மீது மினி பஸ் மோதியதில் 8 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர்.

ரஷ்ய நாட்டின் வொரொனஸ் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கார் ஒன்று வொரொனஸ் - லூஹான்ஸ்க் பிரதான வீதி அருகில் சென்ற போது அங்கு வந்த மினி பஸ் ஒன்று வேகமாக மோதியது.



இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 8 பேர் பரிதாபமாகப் பலியாகினர். மேலும் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என அந்நாட்டு அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (7)

# லண்டனுக்கு புதிய மேயர் தேவை

## எச்சரிக்கும் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

லண்டனுக்கு புதிய மேயர் தேவை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரித்தானிய தலைநகர் லண்டனில் நேற்று முன்தினம் சில இடங்களில் இடம்பெற்றுள்ள வன்முறைச்சம்பவங்கள் காரணமாக மூவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், இருவர் காயமடைந்துள்ளதுடன், 14 இற்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநிலையிலேயே வன்முறைகளினால் பாதிக்கப்பட்டுள்ள லண்டனுக்கு புதிய மேயர் தேவை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தின் ஊடாகவே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

'மிக விரைவில் லண்டனுக்கு புதிய மேயர் தேவை. சாதிக் கானால் லண்டனுக்கு பேரழிவு, இப்படியே போனால் நிலை மிக மோசமாகிவிடும்' என மேலும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (7)



# நேபாளத்தில் கட்டடம் இடிந்து விபத்து
# மூன்று இந்தியர்கள் உயிரிழப்பு

(காத்மண்டு)

நேபாளம் நாட்டின் டாங் மாவட்டத்தில் நேற்று முன்தினம் கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் இந்தியாவைச் சேர்ந்த 3 கட்டுமான தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

நேபாளம் நாட்டின் டாங் மாவட்டத்தில் பிரபல சிமெண்ட் தொழிற்சாலையில் ஆறாம் மாடிப் பகுதியை விரிவாக்கம் செய்து கட்டடம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வழக்கம்போல் நேற்று முன்தினம் கட்டுமான பணிகள் நடைபெற்றபோது கட்டடத்தின் ஒரு பகுதி திடீரென்று இடிந்து விழுந்தது. தகவலறிந்து விரைந்துவந்த மீட்புப் படையினர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த மூன்று சடலங்களை வெளியே எடுத்தனர்.

அவர்கள் மூன்று பேரும் இந்தியாவைச் சேர்ந்த சாஹெப் போட்ரா, தயால் ஹூரேன் மற்றும் மாங்கள் காஷ்யாப் எனத் தெரியவந்துள்ளது. (7)

# பிரதமர் மோடியின் பிறந்த நாளன்று மகிந்தவின் மகன் நாமலுக்கு திருமணம்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவுக்கு செப்டெம்பர் 17 ஆம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கடந்த ஞாயிற்றுக் கிழமை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த போது, தனக்குத் திருமணம் நடைபெறவுள்ளது குறித்து அவர், தெரிவித்துள்ளார்.

செப்டெம்பர் 17 ஆம் திகதி தனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாக நாமல் ராஜபக்ஷ கூறியதும், எதற்காக அந்த நாளை தெரிவு செய்தீர்கள் என்று இந்தியப் பிரதமர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு நாமல், சாதாரணமாக ஒரு நாளை தெரிவு செய்ததாக தெரிவித்தார்.

அப்போது, இந்தியப் பிரதமர் மோடி, "ஏன் அவ்வாறு கேட்டேன் என்றால், அன்று தான், (செப்டெம்பர் 17) எனது பிறந்த நாள்" என்று மோடி பதிலளித்துள்ளார்.

மணப்பெண் யார்? நாமல் ராஜபக்ஷவை திருமணம் செய்து கொள்ளவுள்ள மணப்பெண், நன்கு அறியப்பட்ட விளையாட்டு ஆர்வலரும் லங்கா ஸ்போர்ட்ஸ் ரைசனின் (எல்.எஸ்.ஆர்) நிறுவுநருமான திலக் வீரசிங்கவின் ஒரே மகள். (7)

# "சோபா"வின் சர்ச்சைக்குரிய பிரிவுகள் தொடர்பில் இலங்கை வரவுள்ள பொம்பியோவுடன் பேசத் திட்டம்



(கொழும்பு)

அமெரிக்கா முன்மொழிந்துள்ள சோபா உடன்பாட்டின் சர்ச்சைக்குரிய பிரிவுகள் தொடர்பாக கொழும்பு வரும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோவுடன் பேச்சு நடத்தப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

இதன்போதே, 'சோபா' உடன்பாட்டின் சர்ச்சைக்குரிய உட்பிரிவுகள் குறித்து அவருடன் கலந்துரையாடத் திட்டமிடப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவுடன் 'சோபா' உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

எனினும், 'சோபா' உடன்பாடு குறித்து முதன் முதலில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடனேயே அமெரிக்கா பேச்சு நடத்தியது என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அப்போது அமெரிக்காவுடன் பேசிய மகிந்த ராஜபக்ஷ இப்போது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது முரணானது என்றும் அவர் தெரிவித்தார்.

அவரது ஆட்சிக்காலத்தில் முன்மொழிந்த அல்லது கையெழுத்திடப்பட்ட திட்டங்கள், உடன்பாடுகளுக்கு பின்னர் அவர் எதிர்ப்புத் தெரிவிப்பது இது முதல் முறையல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். (7)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

தஜிகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியுள்ளார். அதன்படி அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இலங்கையை வந்தடைந்துள்ளார்.

ஆசியாவில் கலந்துரையாடல் மற்றும் நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குறித்த 5 ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று நாட்கள் பயணமாக கடந்த 13 ஆம் திகதி தஜிகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்தார்.



அவரின் குறித்த விஜயத்தின் போது சில முக்கிய அதிகாரிகளும் பயணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# பிறப்புச் சான்றிதழ் விநியோக செயற்பாட்டை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு நடவடிக்கை

பிறப்புச் சான்றிதழ் விநியோகிக்கும் செயற்பாட்டை டிஜிற்றல் மயப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக பதிவாளர் நாயக திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது பாவனையிலுள்ள பிறப்புச் சான்றிதழ்களில் நூற்றுக்கு 18 வீதமானவை போலியானதென அடையாளம் காணப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவ்வாறான போலிப் பிறப்புச் சான்றிதழ்களை வெளியிடுவதைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் போலியான சான்றிதழ்களை சமர்ப்பிப்போருக்கு ஆறு மாதகாலம் வரை சிறைத் தண்டனை வழங்கப்படுமெனவும் பதிவாளர் நாயகத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வேதாந்த விளக்கம்

ஒரு பெரியவர் ஒரு ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் கையிலே ஒரு பை. அதற்குள்ளே நிறையப் பணம் இருக்கின்றது. இந்தப் பெரியவர் களைப்பினால் கண்ணை லேசாக மூடுகின்றார். இந்த நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆசாமி ஒருவர் மெதுவாகக் கிட்டே வருகின்றான். நைசாக கைப்பையை பறித்துக் கொண்டு போய் விட்டான். அவன் போவதற்குள்ளே பக்கத்திலே இருந்தவர்கள் பார்த்து விட்டார்கள். உடனே சத்தம் போட்டார்கள். பெரியவர் முழிக்கின்றார்.

உடனே எழுந்து ஓடி அந்த ஆசாமி மேல் பாய்ந்து பையை மீட்டுக் கொண்டு வந்ததன் பின் தான் அவருக்கு நிம்மதி. அந்த ஆளிற்கு என்னென்ன மரியாதை கொடுக்க வேண்டுமோ அதையெல்லாம் மற்றவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள். இது தான் இயல்பு.

இதை விட்டு விட்டு பெரியவர் பணப்பையை தானே எடுத்துக் கொண்டு போறார். போனால் போகட்டும் அவனும் மனிதன்! நானும் மனிதன் தானே! என்று வேதாந்தம் பேச மாட்டார். அப்படி பேசினால் அவர் வேதாந்தத்தை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம். அதை விளங்க வைப்பதற்காக ஶ்ரீராம கிருஷ்ணரே ஒரு கதை சொல்லியிருக்கின்றார்.

ஒரு காட்டிலே சாது இருந்தாராம். அவருக்குப் பல சீடர்கள். ஒரு நாள் அவர்களை எல்லாம் கூப்பிட்டு உட்கார வைத்து உபதேசம் செய்தார். இந்த உலகத்திலே இருக்கின்றது எல்லாம் கடவுளுடைய வடிவங்கள். அதை நீங்க எல்லாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி புரிந்து கொண்டு எல்லாரையும் வணங்க வேண்டும்! என்றார்.

எல்லா சீடர்களும் அக்கறையாக அதை மனதில் வாங்கிக் கொண்டார்கள். ஒரு நாள் ஒரு சீடன் விறகு பொறுக்குவதற்காக காட்டிற்குப் போனான். அவனுக்கு எதற்கு விறகு? ஹோமம் வளர்ப்பதற்கு. நடுக்காட்டிலே போய்க் கொண்டு இருக்கின்றான்.

அந்தச் சமயத்திலே திடீர் என்று ஒரு சத்தம் கேட்கின்றது. யாரோ ஒரு ஆள் பலமாக சத்தம் போட்டு சொல்கின்றார். யார் எங்கே இருந்தாலும் ஓடிப் போய் விடுங்கள். மதம் பிடித்த யானை ஒன்று வந்து கொண்டிருக்கின்றது என்று கத்துறாங்க! அவ்வளவு தான் இதைக் கேட்டதும் அங்கேயிருந்தவர்கள் ஆளுக்கு ஒரு பக்கமாக ஓடிப்போய் ஒளிந்த கொண்டார்கள்.

சிலபேர் கிடுகிடு என்று மரத்திலே ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். ஆனால் இந்த சீடன் மட்டும் நகரவே இல்லை. நான் எதற்காக ஓட வேண்டும்? நானும் கடவுள்? இந்த யானையும் கடவுள்? என்று நினைத்துக் கொண்டு அந்த இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டிருந்தான்.

யானை அருகில் வந்து விட்டது. இவன் அசையவே இல்லை. இருந்த இடத்திலேயே நின்று கொண்டு கைகள் இரண்டையும் மேலே தூக்கினான். துதிப்பாடல் ஒன்றை பாட ஆரம்பித்தான். யானைக்கு மேலே அமர்ந்திருந்த மாவுத்தன் சத்தம் போட்டான். ஓடிப் போய்விடு! என்று கத்தினான். இந்த சீடனுக்கு அது எல்லாம் பெரிதாகப்படவேயில்லை. அவன் பாட்டிற்கு என்னத்தையோ முணுமுணுத்துக் கொண்டு இருந்தான். இவன் வேண்டும் என்றால் அந்த யானையை கடவுளாக நினைக்கலாம். அந்த யானை இவனைக் கடவுளாக நினைக்க வேண்டுமே! அப்படியெல்லாம் அதற்கு ஒன்றும் தோன்றவில்லை

இவன் கைகள் இரண்டையும் மேலே தூக்கிக் கொண்டு நின்றது அதற்கு ரொம்ப வசதியாகக்போய்விட்டது. அப்படியே துதிக்கையாலே சுருட்டி வளைத்து அவனை மேலே தூக்கியது. தூக்கி வேகமாக ஒரு பக்கமாக எறிந்து விட்டது.

அம்மாடி எனக் கத்தியபடி போய் விழுந்தான்! பலமான காயம். ஆச்சிரமத்திலே இருந்தவர்கள் இதைக் கேள்விப்பட்டு ஓடி வந்தார்கள். தூக்கிக் கொண்டு போய் ஆச்சிரமத்திலே சேர்த்தார்கள். இவன் மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்தான். அப்போது அங்கிருந்த சீடன் ஒருவன் பார்த்துக் கேட்டான். யானை வந்தது தான் உனக்குத் தெரியுமே, எதற்கு ஓடவில்லை என்றான். உலகத்தில் இருக்கின்ற எல்லாமே கடவுளுடைய வடிவங்கள். எமது குருதேவர் அப்படித் தானே சொன்னார். அதனால் யானையைப் பார்த்ததும் கடவுள் தான் வருகிறார் என்று நினைத்து விட்டேன் என்றான்.

குருநாதர் இதைக் கேட்டுவிட்டு அது சரியப்பா நீயும் கடவுள் தான். யானையும் கடவுள்தான். அந்த யானை மேலே உட்கார்ந்திருந்த மாவுத்தனும் கடவுள்தானே! அந்தக் கடவுள் ஓடிப்போ என எச்சரிக்கை கொடுத்ததே. அந்த வார்த்தையிலே உனக்கு ஏன் நம்பிக்கை வரவில்லை? என்று கேட்டார்.

சீடன் திருதிரு என்று முழிக்க ஆரம்பித்தார். அப்பதான் அவர் செய்த தவறு அவனுக்குப் புரிந்தது. வேதாந்தத்தை சரியாக புரிந்து கொள்ளாததால் வந்த விளைவு இது! வேதாந்திகள் போல் இருக்கிற சில பேரையும் இந்தக் காலத்திலே சரியாகப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கின்றது.


நான் ஆரம்பத்திலே சொன்னேனே ரயிலில் பயணம் செய்த பெரியவர் ஒருத்தரைப் பற்றி... அதேபோல் வேதாந்தி ஒருத்தரும் பயணம் செய்தார். இவர் கையிலேயும் ஒரு சூட்கேஸ் இருந்தது. அதேசமயம் பார்த்து ஒரு திருடன் திருடிக் கொண்டு ஓடினான். எல்லோரும் சத்தம் போட்டார்கள். இவர் கொஞ்சம் கூட அலட்டிக் கவில்லை. போனால் போகட்டும் கவலையில்லை. அந்த திருடனை ஒன்றும் செய்யாதீர்கள். பாவம் பிழைத்துப் போகட்டும் என்றார்.

இவர் தான் உண்மையான வேதாந்தி என்று எல்லோரும் நினைத்து காலிலே விழுந்து கும்பிட ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்கள் அத்தனை பேருக்கும் ஒரு உண்மை தெரியாது. அதாவது அந்த சூட்கேஸில் இருந்தது முழுவதும் கள்ள நோட்டு என்பது.

# ஆனி மாத இராசி பலன்கள்

## 16.06.2019- 16.07.2019

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விகாரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் தனாதிபதியான புதனுடன் இணைந்து லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு கூட லாபாதிபதி செவ்வாயும் இருக்கிறார். எனவே உங்களுக்கு இந்த மாதம் ஒரு இனிய மாதமாகும். எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும் மாதமாக அமையப் போகிறது.

குடும்ப முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். கடுமையாக முயற்சித்தும் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். 'கல்யாண வாய்ப்புகள் கைகூடவில்லையே' என்ற கவலை இனி அகலும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல மனிதர்களின் தொடர்பால் வளர்ச்சியில் ஏற்பட்ட தளர்ச்சி அகலும்.

பஞ்சம ஸ்தானத்தில் கேதுவும், 11இல் ராகுவும் இருப்பதால் சில நேரங்களில் இனம்புரியாத கவலை ஆட்கொள்ளும். இருப்பினும் வழிபாடுகள் உங்கள் வளர்ச்சிக்கு வித்திடும். குரு வக்கிர கதியில் இருப்பதால் குருவிற்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். அதே நேரத்தில் இராசிநாதன் சூரியனோடு ராகு இருப்பதால் ராகு - கேதுக்களுக்குரிய வழிபாடுகளையும் செய்ய வேண்டும். கிரகங்கள் வலிமை இழந்திருக்கும் பொழுது அவை செயற்பட வேண்டுமானால், அதற்குரிய ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடுவதன் மூலம்தான் யோகங்களை வரவழைத்துக்கொள்ள இயலும்.

அதேநேரத்தில் அர்த்தாஷ்டம குருவாக வியாழன் சஞ்சரிக்கிறார். இருப்பினும் குரு வக்கிர இயக்கத்தில் இருப்பதால் ஆரோக்கியப் பாதிப்புகள் ஏற்படாது. உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. தாய்வழி ஆதரவு கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். குருவின் பார்வை சுக்கிரன் மீது பதிகிறது. தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் சொந்த வீட்டில் சஞ்சரிப்பது யோகம்தான். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

இம்மாதம் நடராஜர் தரிசனம் உத்திர நட்சத்திரம் அன்று நடைபெற உள்ளது. அன்றைய தினம் நடராஜப் பெருமானின் அபிஷேகத்தைப் பார்த்து வழிபட்டு வந்தால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

கடக செவ்வாய் சஞ்சாரம்


ஜூன் 24 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். கடக இராசி செவ்வாய்க்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 4, 9

## எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்

ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், உங்களுக்கு யோகம் செய்பவரும் கூட. அவர் நீச்சம் பெறுவது நன்மைதான். என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்துக்கள், இப்பொழுது நல்ல விலைக்கு விற்று இலாபத்தைக் கொடுக்கும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். முன்னோர் வழிச் சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கும். உடன்பிறப்புக்களின் இல்லங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு உதவி செய்வீர்கள். ஊர் மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள், வெளிநாட்டுத் தொடர்பு போன்றவை வரக்கூடிய வாய்ப்பு உண்டு. வழக்குகள் சாதகமாக முடியும்.

புதன் வக்கிர காலம்

ஜூன் 24 ஆம் திகதி முதல் ஜூலை 14 ஆம் திகதி வரை, புதன் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். இக்காலத்தில் உறவினர் வழி பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்




கள். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் பொழுது யோசித்துக் கையெழுத்திடுவது நல்லது. பிறருக்கு பிணை சொல்வதை தவிர்த்து விடுங்கள். மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்பு ஏற்படலாம். ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் செய்பவர்கள் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது அவசியம். இதுபோன்ற காலங்களில் புதனுக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் தடைகள் நிவர்த்தியாகும்.

மிதுன சுக்கிரன் சஞ்சாரம்

ஜூன் 29 ஆம் திகதி மிதுன இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள புதனுடன் இணைந்து புத- சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பல மாதங்களாக முயற்சி செய்தும் இதுவரை நெருங்கி வராத வரன்கள், இப்பொழுது நெருங்கி வரும். திடீரென மங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

வங்கிச் சேமிப்பு உயரும். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் அறுபத்துமூவர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பொருளாதார விருத்தி அதிகரிக்கும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து, பல நல்ல காரியங்களை முடித்துக்கொடுப்பார்கள். தேக நலன் சீராகும். தெய்வீக வழிபாடுகளில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் கனிவும்; பாசமும் கூடும். ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் வழியில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். பெண் குழந்தைகளின் கல்யாணக் கனவுகள் நனவாகும். அதுமட்டுமல்லாமல் பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியம் சீராகும். தாய்வழி ஆதரவு உண்டு. சகோதர வர்க்கத்தினரில் ஒருசிலர் உங்களை விட்டு விலக நேரிடும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வு வந்து சேரும். நடராஜப் பெருமான் வழிபாடு நன்மையைத் தரும்.



விகாரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், தொழில் ஸ்தானத்தில் பலம்பெற்றுச் சஞ்சரிக்கிறார். அவரோடு விரயாதிபதி சூரியனும் 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாயும் இணைந்திருக்கிறார்கள். மேலும் சர்ப்பக் கிரகமான ராகுவும் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சுக ஸ்தானத்தில் சனியும் கேதுவும் இருக்கிறார்கள். சுகாதிபதி குருவோ வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். பிதுர்ரார்ஜித ஸ்தானத்தில் சுக்கிரன் பலம்பெற்று வலம் வருகிறார்.

இப்படிப்பட்ட கிரக நிலைகளோடு இம்மாதம் பிறப்பதால் மனக்குழப்பம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகரிப்பதால், பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் தடை, தாமதம் உண்டாகும். கொடுக்கல்-வாங்கல்களில் சில பிரச்சினைகள் உருவாகலாம். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை வந்து கவலை கொள்ளச் செய்யும். மங்கல நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கி வைத்த தொகை, மற்றொரு வழியில் செலவாகிவிடலாம். பங்குதாரர்களின் ஒத்துழைப்பு குறைவாகவே கிடைக்கும். பிறருக்கு பணப்பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்தால், அவர்கள் அதை குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்க இயலாமல் போகலாம். அதன் மூலமாக உங்களுக்கு மனக்கவலை அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். பணியாளர்களின் வேலைகளையும் சேர்த்து பார்க்கும் சூழ்நிலை உருவாகும். இரவு-பகலாக ஈடுபட்டாலும் அதற்கு ஏற்ற விதத்தில் பலன் கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். பொதுவாகவே இந்த மாதத்தில் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை சிந்தித்துச் செய்வது நல்லது. மேலும் அருகிலிருக்கும் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளும் கடைசி நேரத்தில் கைகொடுக்கும். விரயாதிபதி, இராசிநாதனோடு இருக்கும் இந்த நேரத்தில் வீண் விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டலாம்.

சுக்கிர பலம் நன்றாக இருப்பதால் கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் அமைப்பு உருவாகலாம். விரயங்களில் இருந்து விடுபட விழிப்புண

## மனக்குழப்பம் அதிகரிக்கும்

ர்ச்சி அதிகம் தேவைப்படும். இந்த நேரத்தில் நடராஜப் பெருமான் வழிபாட்டை உத்திர நட்சத்திரம் அன்று மேற்கொள்வது நல்லது.

கடக செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 24 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். கடக இராசி செவ்வாய்க்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் நீச்சம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். இழப்புகளை ஈடுசெய்ய எதிர்பார்த்த தொகை கிடைக்கும். அழைப்பு மணி அடித்தவுடன் வருகின்ற பணியாளர்களால் ஏற்பட்ட அல்லல் அகலும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும் நேரம் இது. உடன்பிறப்புகள் உங்கள் யோசனைகளை ஏற்றுக்கொள்வர். கடன்சுமை குறைய புதிய வழிபிறக்கும். உடன் பிறந்தவர்களின் இல்லங்களில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்திப் பெயர் எடுத்துக் கொள்வீர்கள்.

புதன் வக்கிர காலம்

ஜூன் 24 ஆம் திகதி முதல் ஜூலை 14




ஆம் திகதி வரை மிதுனத்தில் புதன் வக்கிரம் பெறுகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறுவது யோகம்தான். இக்காலம் ஓர் இனிய காலமாகும். எளிதில் சில காரியங்கள் முடிவடையும். உத்தியோகத்திற்காக முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடும். பணிபுரிபவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கலக்கம் அகலும். சேமிப்பு உயரும். சிறுசிறு பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

மிதுனச் சுக்கிரன் சஞ்சாரம்

ஜூன் 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள புதனுடன் இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். இக்காலம் ஒரு அற்புதமான காலமாகும். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமை காண்பீர்கள். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி காண்பீர்கள்.

விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். இடம், பூமியால் இலாபம் கிடைக்கும். பழைய தொழிலில் இருந்த பங்குதாரர்களை நீக்கிவிட்டுப் புதியவர்களை இணைத்துக் கொள்ள சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்பால் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வரும் சந்தர்ப்பங்கள் வளர்ச்சிக்குரியதாக இருக்கும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து சேரும். மாதத் தொடக்கத்தில் விரயங்கள் அதிகரித்தாலும் பிற்பாதியில் வருமானம் திருப்திகரமாகவே இருக்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குடும்பப் பிரச்சினைகளை கண்டும் காணாமல் இருந்தால்தான் நிம்மதி கிடைக்கும். புத்திர ஸ்தானாதிபதி சனி வக்கிர இயக்கத்தில் இருப்பதால், பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. தாய்வழி ஆதரவு, சகோதர ஆதரவு ஓரளவே கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து அணிந்து அழகு பார்க்கும் வாய்ப்புக் கிட்டும். வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும். பணி புரியும் பெண்களுக்குச் சக ஊழியர்களால் தொல்லைகள் ஏற்படலாம். தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் தளரவிட வேண்டாம். தடைகள் அகல நடராஜப் பெருமானை-ன நம்பிக்கையோடு வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# நற்பண்புகளை சிந்தையில் இருத்த வேண்டும்

## ஜனாதிபதியின் பொசன் செய்தி



(கொழும்பு)


நாம் பெற்ற உன்னத சமய கலாசாரத்தின் மூலாதாரமான கருணை, அமைதி, நல்லிணக்கம் ஆகிய நற்பண்புகளை சிந்தையில் இருத்தவேண்டிய தருணம் இதுவாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஒட்டுமொத்த இலங்கையர்களின் பொசன் பௌர்ணமி தின உறுதிமொழியாக அமைய வேண்டியதும் அதுவேயாகும் எனவும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டார்.

அந்த ஆன்மீக மலர்ச்சியையும் வளமான கலாசாரத்தையும் பாதுகாக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கான ஆற்றலும் அறிவும் கிட்டும் பொசன் பௌர்ணமி தினமாக அமைய வேண்டும் என பிரார்த்திப்பதாகவும் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார். (இ-7)

# மனிதாபிமானத்தை கட்டியெழுப்ப ஒன்றிணைய வேண்டும்-பிரதமர்



பயங்கரவாத சக்திகள் செயற்படுகின்ற இவ்வாறான காலப் பகுதியில் மென்மேலும் சிறப்பாக தர்மத்தைப் பின்பற்றி, மனிதாபிமானத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைய வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொசன் தினத்தை முன்னிட்டு பிரதமர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயரிய பொசன் பூரணை தினத்தில் உண்மையான தர்மத்தின் ஆழமான உயர்ந்த பெறுமானங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

வெளிப்புறச் சடங்குகள் மூலமன்றி தர்மத்தின் உண்மையான மையக் கருத்தைக் கொண்டு எமது வாழ்வை வளப்படுத்திக் கொள்வோம்.

சிறந்த முன்மாதிரியுடன் ஏனைய சமயங்கள் மற்றும் கலாசாரங்களுக்கு மதிப்பளித்து நல்லிணக்கத்துடன் வாழ அனைவரது உள்ளங்களும் ஞானத்தால் நிரம்ப வேண்டும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திக்கம் வடிசாராய தொழிற்சாலையை நவீனமயப்படுத்தும் வேலைகள் ஆரம்பம்

## அமைச்சின் செயலர் சிவஞானசோதி தகவல்



(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பனை மரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக வடமாகாணத்தில் மட்டும் 10 மில்லியன் மரங்கள் காணப்படுகின்றன. பதநீர் மற்றும் கள்சார் உற்பத்திகள் பனைசார் உற்பத்திகளில் முக்கியமானதாகக் காணப்படுகின்றன.

பனைசார் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தவர்களாகவுள்ள 7500 பேர் பதநீர் மற்றும் கள்ளு இறக்கும் தொழிலாளர்களாக காணப்படுகின்றனர்.

கருப்பனி, பனங்கள்ளு மற்றும் பதநீர் சார்ந்த உற்பத்திகளில் மருத்துவ குணங்கள் உள்ளதாக நம்பப்படுவதுடன் ஆரோக்கியமான பொருட்களாகவும் கருதப்படுகின்றன. பெப்ரவரி மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாத காலப் பகுதியில் பதநீர் அதிகளவாக காணப்படுவதுடன் மிகையான பதநீர் வீணாக்கப்பட்டு பதநீர் சார்ந்த உற்பத்தியில் தங்கியுள்ளவர்கள் அதன் பொருளாதார நன்மைகளை அடைந்திருக்கவில்லை. இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்காக திக்கம் வடிசாராய தொழிற்சாலை 1984ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகையான பதநீர் மற்றும் கள் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களான மதுசாரம், எதனோல் மற்றும் சாராயம் ஆக மாற்றப்பட்டன. இத் தொழிற்சாலை 1984 ஆம் ஆண்டிலிருந்து நன்றாக தொழிற்பட்டிருந்ததோடு பதநீர்/பனங்கள் உற்பத்தி சார்ந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு பங்களிப்பு செய்தது என. தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

30 வருடகால யுத்தத்தால் இத்தொழிற்சாலை கவனிப்பில்லாமலும் பராமரிக்கப்படாமலும் இருந்ததுடன் காலங்கடந்த பழைய உபகரணங்கள், இயந்திரங்கள், பழுதடைந்த உதிரிப் பாகங்கள் பழைமை வாய்ந்த தொழில்நுட்பங்கள் காரணமாக தொழிற்படாமல் காணப்படுகின்றது.

இதன் காரணமாக சாராயம் மற்றும் மதுசாரம் போன்ற உற்பத்திப் பொருட்களின் தரம் குறைவாகக் காணப்படுவதுடன் உற்பத்தி செலவும் உயர்வாகக் காணப்படுகின்றது. பதநீர் மற்றும் கள் சார்ந்த சாராயத்திற்கு மேலதிகமாக பெறுமதி சேர்க்கப்பட்ட வேறு உற்பத்திப் பொருட்களான மதுசாரம் மற்றும் எதனோல் போன்றவற்றை உற்பத்தி செய்ய முடிவதில்லை.

இதேவேளை சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தும் Surgical sprit போன்ற பொருட்களுக்கு வைத்தியசாலைகள் மற்றும் மருந்துகளை தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து (pharmaceutical companies) உள்ளூரிலும் வெளிநாட்டிலும் அதிக கேள்வி காணப்பட்டது. மேலும் வெளிநாடுகளில் வாழும் இடம் பெயர்ந்தவர்களிடமிருந்து பனைசார் சாராய உற்பத்திகளுக்கு அதிகமான கேள்வி காணப்படுகின்றது. Surgical sprit உலக நாடுகளில் மருந்துகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுவதால் மருந்துகளை தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்தும் அதிகமான கேள்வி காணப்படுகின்றது. தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில் பனைசார் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மக்கள் பிரதிநிதிகள், பனைதுறை சார் வல்லுநர்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோள்களுக்கு அமைவாக அமைச்சால் இத்தொழிற்சாலையை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பதநீர் மற்றும் கள் இறக்கும் குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களாக காணப்படுவதுடன் முழுமையாக பனைசார் வாழ்வாதாரத்திலேயே தங்கியவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ் வடிசாராய தொழிற்சாலையை மீளக்கட்டியெழுப்புவதற்கும் நவீன உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கும் 185 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புனரமைப்புப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரண்டு மாடி நிர்வாகக் கட்டடம் (543 சதுரமீற்றர்கள்) மலசலகூட வசதிகளுடன் 59.77 மில்லியன் ரூபா செலவில் நுழைவாயில் மற்றும் பாதுகாவலர் அறை 5 மில்லியன் ரூபா செலவில், நீர்த்தாங்கி, நீர்சேமிக்கும் அறை, நீர் இறைக்கும் இயந்திர அறை 5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

நவீன உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான கேள்வி கோரல்கள் கோரப்பட்டு மதிப்பீடுகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

இத்தொழிற்சாலையை நவீன இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்துடன் இவ்வருட இறுதிக்கு முன் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இம்முன்னெடுப்பானது கள் இறக்கும் குடும்பங்களினதும் அது சார்ந்த உற்பத்திகளில் தங்கியிருக்கும் குடும்பங்களினதும் நீண்டகால தேவையையும் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்யும் என எதிர்பார்ப்பதாகவும் விரயமாகும் கள்ளினை பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களாக மாற்றுவதன் மூலம் பனை வளங்கள் உச்சமாக பயன்படுத்தப்படுதலை உறுதி செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 18 தமிழக மீனவர்கள் விடுதலை!

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 18 தமிழக மீனவர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.


இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டின் கீழ் குறித்த 18 தமிழக மீனவர்களையும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கடற்படையினர் கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்திருந்தனர்.

இந்நிலையில் இவர்கள் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது நீதவான் அவர்களை விடுக்குமாறு உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து தமிழக மீனவர்கள் 18 பேரையும் இந்திய குடிவரவு அதிகாரிகளிடம் இலங்கை அதிகாரிகள் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டதாகவும் இந்திய ஊடகங்கள் மேலும் தெரிவித்தன. (இ-7)

# என்மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை

## ஹிஸ்புல்லா திட்டவட்டம்



(கொழும்பு)

தன்மீது சுமத்தப்பட்டுள்ள எந்தவொரு குற்றச்சாட்டையும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் தான் தவறு செய்தமை நிரூபணமானால் எந்தத் தண்டனையையும் ஏற்க தயாராகவே இருப்பதாகவும் கிழக்கின் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட 8 மணிநேர விசாரணைகளுக்குப் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கவுதி அரேபிய முதலீட்டாளர்கள் மூவரை நான் பாசிக்குடா ஹோட்டலில் சந்தித்திருந்தேன். இது தொடர்பாக என்னிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதேபோல், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியான இன்பராசா என்பவர், நான் முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதம் வழங்கியதாக என்மீது முறைப்பாடு அளித்திருந்தார். இது தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெற்றன.

அத்தோடு, ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் தொடர்பாகவும் அதிகாரிகள் என்னிடம் விசாரணைகளை நடத்தினர்.

இனிமேல் எப்போது விசாரணைக்காக அழைப்பார்கள் என்று எனக்குத் தெரியாது. பெரும்பாலும், விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டது என்றே நான் கருதுகிறேன்.

இந்த விசாரணைகள் முடிவடைந்தவுடன் பொலிஸ் மற்றும் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

பாசிக்குடா, ஹோட்டலில் நான் சந்தித்தவர்கள் பயங்கரவாதிகள் என்று பொய்யான பரப்புரைகள்தான் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டன. இது முற்றிலும் பொய்யான கருத்தாகும்.

இது பொய்யான குற்றச்சாட்டு என்று பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் விசாரணையின் ஊடாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கிணங்கவே நான் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தேன். எனவே, இத்துடன் என் மீதான விசாரணைகள் நிறைவடைந்துவிட்டதாகவே நான் நினைக்கிறேன்.

எவ்வாறாயினும், என் மீது தற்போது சுமத்தப்பட்டுள்ள எந்தவொரு குற்றச்சாட்டையும் நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இவை அனைத்தும் பொய்யானவையாகும். நான் எந்தவொரு தவறையும் செய்யவில்லை.

அப்படி தவறு செய்திருந்தால் எவ்விதத் தண்டனையையும் பெற்றுக்கொள்ள நான் தயாராகவே இருக்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

மேற்கூறப்பட்ட வாதப் பிரதிவாதங்கள் இரண்டு முக்கியமான தாக்கங்களைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தின. அவர்கள் சமஷ்டிக் கோட்பாட்டை யிட்டு ஒரு மயக்கமான, குழப்பமான விளக்கத்தையே பெற்றிருப்பார்கள் என்பது முதலாவதாகும்.

அடுத்து மேற்படி அரசியல் தலைவர்கள் பாராளுமன்றத்திலும் பொது மேடைகளிலும் சமஷ்டிக் கோட்பாடு சம்பந்தமாகப் பேசிய விடயங்களும் பத்திரிகைகள் வாயிலாக அறியப்பட்ட கருத்துகளும் தமிழ்மக்கள் மத்தியில் பரவி அதன்தாக்கம் தமிழர் தமது அரசியல் நிலைப்பாடு பற்றித் தீவிரமாகச் சிந்திப்பதற்கும் தமிழ்த் தேசிய வாதத்தை முன்னெடுப்பதற்கான படிக்கற்களாகவும் அமைந்தன.

செல்வநாயகம் 1952 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் காங்கேசன். துறைத் தொகுதியில் தோல்வியடைந்தமைக்கும் தமிழரசுக் கட்சி அத்தேர்தலில் ஏழு தொகுதிகளில் போட்டியிட்டு இரண்டு தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றதற்கும் மக்கள் மத்தியிலே சமஷ்டி ஆட்சிபற்றி நிலவிய குழப்பமான நம்பிக்கையற்ற நிலையே காரணமாகும்.

இருந்தபோதிலும் 1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி எட்டுத் தொகுதிகளில் வெற்றிபெற பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஒரு தொகுதியிலேயே வெற்றிபெற முடிந்தது.

பெரும்பான்மையான தமிழ்மக்கள் செல்வநாயகம் முன்வைத்த சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டனர் என்பதனையும் தமிழ்த் தேசிய எழுச்சி அவர்கள் மத்தியில் மிகவும் வளர்ந்துள்ளதையும் இத்தேர்தல் முடிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

அதுமட்டுமல்லாமல் அவர்கள் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினதும் பொன்னம்பலத்தினதும் நடவடிக்கைகளாலும் இரு பகுதியினரிலும் நம்பிக்கையீனமும் விரக்தியும் அடைந்திருந்தமையையும் இவை தெளிவாகக் காட்டுகின்றன.


மேலும் தமிழரசுக் கட்சியும் அதன் தலைவர்களும் சமஷ்டிக் கோரிக்கை பற்றி தமிழர் பிரதேசங்களிலுள்ள சகல தமிழ் மக்கள் மத்தியிலும் விளக்கம் அளித்து அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டனர் என்பதனையும் மேற்படி தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன.

எனவே செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக்கட்சி மக்கள் இயக்கமாக வளர்ச்சியடைந்திருப்பதையும் தமிழ் மக்கள் தமது அரசியல் விடிவுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தமது ஆதரவை வழங்கத் தயார் நிலையில் இருப்பதையுமே இத்தேர்தல் முடிவுகள் மேலும் காட்டுகின்றன.

ஹவாட் ரிகின்ஸ் (Haward Wriggins) இதைவிட்டுப் பின்வருமாறு கூறுகின்றார்.

செல்வநாயகம் தமிழ்த் தலைவர்கள் அத்தனை பேரையும் விடத் தான் நினைப்பதை வெளிப்படையாகக் கூறுவதிலும் தளராத கொள்கையுடைய ஒருவராகவும் இருந்ததுடன் கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சி அளிக்க முன்வந்த பதவி யாவற்றையும் புறந்தள்ளியவர். முதலாவது சுதந்திரமான பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே தற்போதைய ஒற்றையாட்சி முறை பல இனங்களைக் கொண்ட இலங்கைக்குப் பொருத்தமற்றது எனவும் சமஷ்டி முறையிலான அரசமைப்பு ஒன்றினால் மட்டுமே தமிழ்பேசும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு வழங்க முடியும் என்றும் தொடர்ந்து நிலை நிறுத்தியுள்ளார்.

சிங்கள மொழிச்சட்டத்தினால் தமக்கு பேராபத்து ஏற்படப் போகின்றது என தமிழர்களே உணர்ந்தபோது அவர்கள் இயல்பாகவே சிறந்த மனிதர் எனத் தாம் அறிந்த ஒருவரிடமே வழிகாட்டலைக் கோரி நின்றனர்.




டி.எஸ்.சேனநாயக்க

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

தமிழரசுக் கட்சியினர் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த காலப்பகுதிகளில் (1952-1956) சிங்கள சுயபாஷை (Swabasha Movement) இயக்கம் மிகவும் மும்முரமாக இலங்கை அரசியலில் இடம்பெற்றது. சிங்கள சுயபாஷை இயக்கம் 1940 களிலிருந்தே ஆங்கில மொழிக்கு எதிராக எழுந்த ஒன்றாகும்.

இது பின்னர் தமிழ்மொழிக்கு எதிரானதாக மாறி 1951களிலிருந்து மிகத் தீவிரமான அரசியல் பிரச்சினையாக உருவெடுத்திருந்தது. பின்னர் ஜனாதிபதியாக பதவியேற்ற ஜே.ஆர். ஜெயவர்த்தன குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள் சிங்களமொழியை இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாகவேண்டும் என்ற மசோதாவை 24 மே 1944 இல் அரச சபையில் முன்வைத்திருந்தார். அங்கு அவர் பின்வருமாறு தனது பிரேரணையை ஆதரித்துப் பேசியிருந்தார்.

முழு உலகத்திலுமே மூன்று மில்லியன் மக்களால் மட்டுமே பேசப்படும் மொழியாகிய சிங்கள மொழிக்குச் சமமான அந்தஸ்து தமிழ்மொழிக்கு வழங்கப்படின் சிங்கள மொழி பாதிப்புக்குள்ளாகும் என நான் பெரிதும் அஞ்சினேன்.

இந்தியாவில் நாற்பது மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பயன்படுத்தப்படும் தமிழ் இலக்கியம், தமிழ்த் திரைப்படங்கள், தமிழ்க் கலாசாரம் என்பவற்றின் செல்வாக்கு சிங்கள மொழியின் எதிர்காலத்திற்குப் பாதகமாகும் என நான் எண்ணினேன்.


இதே கருத்தை எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க 1955 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்ட மசோதா விவாதத்தின்போது தெரிவித்ததை 8 நவம்பர் 1955 டெய்லி நியூஸ் பத்திரிகை பின்வருமாறு வெளியிட்டிருந்தது.

அவர்களுடைய இனத்துக்கே (தமிழருக்கு) உரித்தான நூல்கள், கலாசாரம், பற்றுறுதி, வலிமை என்பனவற்றுடன் (தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படின்) தமிழர் விரைவில் எம்மீது ஆதிக்கம் செலுத்தும் சக்தியாகிவிடுவர்.

அரச சபையின் தமிழ் உறுப்பினர் இந்த மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையால் தமிழ்மொழியும் உத்தியோகபூர்வ மொழியாக இருக்க வேண்டுமெனத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. சிங்கள மக்களின் சுயபாஷை இயக்கம் பிரதானமாக கீழ் நடுத்தர வர்க்கத்தினராலேயே முன்னெடுக்கப்பட்டது. (தொடரும்)

# என்னை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு கோருகின்றனர்

## ஆதிவாசிகளின் தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு தன்னிடம் பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வருவதாக ஆதிவாசிகளின் தலைவர் வனஸ்பதி ஊருவரிகே வன்னியலேத்தோ தெரிவித்தார்.**

ஆதிவாசிகளின் தலைவரது 72 வது பிறந்த தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

இதனை முன்னிட்டு தம்பாணையில் பௌத்த சமய நிகழ்வுகள் இடம்பெற்றன.

பலர் தமது பிறந்த நாளை கொண்டாடும் போது மதுபான விருந்துகளை வைக்கின்றனர்.

எனினும் நான் தலைவராகப் பதவி வகிக்கும் தம்பாணை மாவரகல விகாரையில் உள்ள இளம் பிக்குகளுடன் இணைந்து மரங்களை நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டுள்ளேன். நாங்கள் விகாரை பூமியில் 100 மரங்களுக்கான செடிகளை நாடினோம்.

நாட்டின் கலாசாரம் மற்றும் சுற்றாடலை நேசிக்கும் நபர் நாட்டின் தலைவராக வர வேண்டியது அத்தியாவசியமானது.

அப்படியில்லை என்றால் எந்த நாட்டையும் கட்டியெழுப்ப முடியாது. நாடாளுமன்றமும் ஆட்சியாளர்களும் பென்சில் மற்றும் அழி இறப்பருக்கு சண்டையும் சிறிய பிள்ளைகளை போல் செயற்படுகின்றனர். இது மிகவும் மோசமானது எனவும் ஆதிவாசிகளின் தலைவர் தெரிவித்தார்.(7)

# 2ம் உலகப்போரில் சேதமடைந்த கப்பலின் பாகங்களைத் திருடிய மூன்று பேர் கைது



(கொழும்பு)

மட்டக்களப்பு கல்லடி கடலில் 2 ஆம் உலகமகா யுத்தத்தில் நீரில் மூழ்கியிருந்த கப்பலின் பாகங்களை சட்டவிரோதமான முறையில் கழற்றிய 3 வெளிநாட்டுப் பிரஜைகளைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கடற்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து கல்லடியில் உள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் 3 பேரும் சம்பவ தினமான நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து கடலில் தாண்ட யுத்தக் கப்பலின் பல இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த கப்பலின் எஞ்சின் பகுதியின் பாகங்கள் மற்றும் இதனை சுழியோடி கழற்றுவதற்கான ஒட்சிசன் சிலிண்டர்கள், நீச்சல் உடைகள் உட்பட பல உபகரணங்களை மீட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த தந்தை, மகன் மற்றும் ஒஸ்ரிய நாட்டைச் சேர்ந்தவர் உட்பட மூவராவர். இவர்கள் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து நீர்கொழும்பு பகுதியில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்து பிக்கப் ரக வாகனம் ஒன்றில் மட்டு. கல்லடிப் பகுதியில் வந்து தங்கி இந்த சட்டவிரோதமான செயற்பாட்டில் ஈடுபட்டதாகவும் கடந்த 7 வருடங்களாக விடு முறையில் இங்கு வந்து இந்த கப்பல் தொடர்பாக நீரில் மூழ்கி அவதானித்து வந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது. (7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1751

### சதீஷ்

பல பிரச்சினைகள் ஒபீஸ்ல ஓடுது... இந்த மண்டே ஒபீஸ் போகலாமா? இல்ல டெங்கு காய்ச்சல்னு லீவு போட்டுடலாமா! பாத்து நல்ல பதிலா சொல்லு



### சரவணன்

இல்லாதவன் மட்டும்தான் இருப்பதை எல்லாம் கொடுத்து விடுகிறான்



### கருணா

படுத்தவுடன் நிம்மதியாய் உறங்கிப்போகும் மனிதனே உலகில் மிகப்பெரிய செல்வந்தன்



### சாந்தி

வழிதவறிய ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கைக்குப் பின்னாலும் ஒரு பொறுப்பில்லாத ஆண் கண்டிப்பாக இருப்பான்




### வரதன்

கவலைகளை எல்லோர் மத்தியிலும் கொட்டிவிட வேண்டாம் அதன் மீது ஏறி நின்று வேடிக்கை பார்ப்பார்கள்



### தரண்யா

இளைஞனா இருந்தப்போ பாடாபடுத்தினது லவ். இப்போ பாடா படுத்துறது லோன் குடும்பஸ்தன் புலம்பல்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

### சஹ்ரான் ஆதரவாக செயற்பட்டதாக கூறி

# ஜனாதிபதியை ஹிஸ்புல்லாஹ் சாதுரியமாக ஏமாற்றிவிட்டார்


## சிறிநேசன் குற்றச்சாட்டு

(ஏறாவூர்)

**பயங்கரவாதி சஹ்ரான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவாகச் செயற்பட்டான் எனக்கூறி கிழக்கின் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் ஜனாதிபதியை சாதுரியமாக ஏமாற்றியுள்ளாரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் குற்றம் சாட்டினார். மேலும், இவரது கொள்கையற்ற அரசியல் பின்புலத்தை சிங்களத் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பயங்கரவாதி சஹ்ரான் தற்போதைய ஜனாதிபதியின் ஆதரவாளராகத்தான் செயற்பட்டவர் என்றும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எப்போதும் தான் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளராகத்தான் செயற்பட்டதாகவும்



ஹிஸ்புல்லாஹ் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூறினார்.

அப்படிப் பார்க்கப்போனால் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஹிஸ்புல்லாஹ் எவ்வளவு சாதுரியமாக ஏமாற்றியுள்ளார் என்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

அவர் அரசியலில் கட்சித் தாவலிலேயே ஈடுபட்டு வருகின்றார். குறுகிய காலகட்டத்தில் அனைத்து அரசியல் தலைவர்களையும் ஏமாற்றும் செயற்பாட்டையே அவர் செய்து வருகிறார்" என்றும் சிறிநேசன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அத்தநாயக்க ஐ.தே.கவில் மீண்டும் இணைய முடியும்

## அகிலவிராஜ் அழைப்பு



(கொழும்பு)

திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கு விரும்பினால் தாராளமாக இணைய முடியும் என்று கல்வி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான அகிலவிராஜ் காரியவசம் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்தநாயக்க மீண்டும் இணையவுள்ளார் என்று கதை அடிபடுவது பற்றி அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"திஸ்ஸ அத்தநாயக்க கட்சியில் மீண்டும் இணைவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.


அவரை விடவும் மிகவும் மோசமாகத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்தவர்கள் எல்லோரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளார்கள்.


அவர் விரும்பினால் இணையலாம். அவர் கட்சிக்கு அதிக சேவைகள் செய்தவர். அவரது சேவையை நாம் மதிக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயகக் கட்சி. எவரையும் விமர்சிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு" - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திஸ்ஸ அத்தநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (7)

# 300 மத குருமார்களுக்கு இலவச மருத்துவ முகாம்





மொறவக்கயில் 300 பௌத்த மதகுருமார்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

சாகல ரத்நாயக்க தனது அரசியல் பிரவேசத்தை மாத்தறை மாவட்டத்தின் தெனியாய பிரதேசத்தில் ஆரம்பித்து அவைஞ் சராகி நேற்று முன்தினத்துடன் 20 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன.

அதனை முன்னிட்டே மொறவக்க காரியாலயத்தில் இவ்வாறு இலவச முகாம் நடத்தப்பட்டது.

இதன்போது கண் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், நடக்க முடியாதவர்களுக்கு இலவசமாக சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டது.

மேலும் பௌத்த மதகுருமாருக்கு மருந்துகள் வழங்கப்பட்டதோடு, அன்னதானமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# பிரதமருடன் ஷங்காய்-ஹொங்கொங் பௌத்த தூதுக்குழுவினர் சந்திப்பு!





(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவிலிருந்து வருகை தந்த ஷங்காய்-ஹொங்கொங் பௌத்த தூதுக் குழுவை சந்தித்தார்.

சீனத் தூதுக்குழுவில், சீனாவின் ஹுனான் மாகாணத்தின் துணைத்தலைவர் வென் மிங் சன், ஹொங்கொங்கிலுள்ள சீன பௌத்த பல்கலைக்கழகத்தின் இயக்குநர் சூ யூ உள்ளிட்ட குழுவினர் பிரதமருடனான சந்திப்பில் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சந்திப்பில், கோட்டை ஸ்ரீகல்யாணி சாகிரீத் தர்ம மகா சங்க சபையின் முதன்மை சங்க நாயக்கர் மற்றும் சபாநாயகர் கரு ஜெயசூரிய உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, ரத்மலானையில் சீன-இலங்கை நட்புறவு புத்த கல்வி நிறுவனத்தை நிறுவுவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், துறவிகளுக்கான பௌத்த மத கல்வி பற்றிய ஆண்டு மாநாட்டை நடத்துவது குறித்தும் உரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு நான் விண்ணப்பிக்கவில்லை

## சபாநாயகர் கரு விளக்கம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினரால் எனது பெயர் குறித்து கோரிக்கை முன்வைக்கப்படுமானால், அது குறித்து ஆராயத் தயாராகவுள்ளேனென சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

பி.பி.சி. செவ்வியொன்றின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




அத்துடன் ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு தான் இதுவரை விண்ணப்பிக்கவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 90 | 80 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 400 | 340 | 400 |
| தக்காளி | 100 | 80 | 80 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | — | 100 | 120 |
| கோவா | 120 | 90 | 120 | 70 | 100 |
| கரட் | 150 | 140 | 150 | 150 | 160 |
| பூசணி | 100 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 80 | 80 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | — | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 90 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 90 | 90 |
| பயற்றங்காய் | 180 | 140 | 100 | 90 | 140 |
| லீக்ஸ் | 140 | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 80 | 75 | 120 |
| கறிமிளகாய் | 200 | 200 | 180 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 150 | 160 |
| போஞ்சி | 200 | 180 | 180 | 250 | 150 |
| கத்தரிதும்பளை | 80 | 80 | 90 | 60 | 100 |
| கீரை-1பிடி | 40 | 20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 35 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 160 | 120 | 100 | 140 |
| வெங்காயப்பூ | 250 | 200 | — | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | — | 40 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | — | 10 | 80 |




# அதி புத்திசாலிகள்



முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் வாழும் மக்கள், இந்த உலகத்திலேயே தாங்கள்தான் பெரிய அறிவாளிகள் என்று நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் அனைவரும் சரியான முட்டாள்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஒருநாள் - அவர்கள் மரத்தால் ஒரு பெரிய வீடு கட்டத் தீர்மானித்தனர். அதற்கான நல்ல மரத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக அவர்கள் காட்டுக்குப் போக முடிவு செய்தனர். அப்போது, அவர்களில் மிகவும் அதிபுத்திசாலியான ஒருவன் சொன்னான்.

"நான் குதிரை வண்டியில் ஏறி முதலில் போகிறேன். நீங்களெல்லாம் பின்னால் வாருங்கள்!" என்றான்.

எல்லாரும் அதை ஏற்றுக் கொண்டனர்.

அதிபுத்திசாலி குதிரை வண்டியில் ஏறி காட்டுக்குப் பாய்ந்து சென்றான். ஆனால், வழியில் அவன் குதிரைவண்டி ஒரு கல்லின் மீது ஏறியதால் கவிழ்ந்தது. அவன் கையிலிருந்த கோடரி தூரத்தில் சென்று விழுந்தது. அவனும் ஆழமான ஒரு குழியில் விழுந்து விட்டான்.

குதிரை வண்டிக்குப் பின்னால் வந்த மற்ற அறிவாளிகள், அதிபுத்திசாலியின் கோடரி வழியில் கிடப்பதைப் பார்த்தனர். அவர்களில் மிகச் சிறந்த அறிவாளி அவன்தான் என்பதால், அவன் கோடரியை விட்டுச் சென்றதற்கு ஏதும் முக்கியமான காரணம் இருக்கும் என்று மற்றவர்கள் நினைத்தனர். அதனால், எல்லாரும் மரம் வெட்டுவதற்காகத் தங்கள் கையில் எடுத்து வந்திருந்த கோடரியை அப்படியே போட்டு விட்டுத் தொடர்ந்து சென்றனர்.

காட்டுக்குச் சென்று வெட்டுவதற்கு ஏற்ற மரத்தைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், யார் கையிலும் கோடரி இல்லையே, பிறகு எப்படி மரம் வெட்டுவது? எல்லாரும் ஒன்றாக அமர்ந்து இதற்கு என்ன வழியென்று சிந்தித்தனர்.

அங்கிருந்தவர்களில் முக்கியமான அறிவாளி சொன்னான்.

"நான் ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறேன். மரத்தை வெட்ட முடியவில்லை என்றாலும் நாம் மரத்தின் கிளையை ஒடிப்போம். இப்போது இருப்பதில் நான்தானே பெரிய அறிவாளி. அதனால் நான் முதலில் மரத்தில் ஏறி உறுதியான ஒரு கிளையைப் பிடித்துத் தொங்குகிறேன். அப்போது உங்களில் ஒருவர் என் காலைப் பிடித்துத் தொங்க வேண்டும். அவருடைய காலைப் பிடித்து மற்றொருவர் தொங்க வேண்டும். அப்படி நீண்ட சங்கிலி போல ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கும் போது நம் பாரம் தாளாமல் கிளை ஒடிந்து கீழே விழும்!" என்றான்.

அது மிகவும் நல்ல கருத்துத்தான் என்று எல்லாரும் ஏற்றுக் கொண்டனர்.

அவ்வாறு அந்த அறிவாளி பக்கத்திலிருந்த மரத்தில் ஏறி ஒரு உறுதியான கிளையைப் பிடித்து தொங்கினான். அவன் காலை மற்றொருவன் பிடித்துத் தொங்கினான். அவன் காலை இன்னொருவன் பிடித்துத் தொங்கினான். இப்படியே எல்லாரும் ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கினர். மிகப் பெரிய பாரத்தால் கிளை எப்போது வேண்டுமானாலும் முறிந்து விடக்கூடிய நிலைக்கு வந்தது. அப்போது அறிவாளி சொன்னான்.

"நண்பர்களே, கிளை இப்போது ஒடிந்து விடும். அதற்கு முன்பு நான் இந்தக் கிளையை இன்னும் கொஞ்சம் பலமாகப் பற்றிக் கொள்கிறேன்!" என்றான்.

கிளையை மேலும் வலுவாகப் பற்றிக் கொள்வதற்காக அவன் கையைச் சற்று அசைத்ததும் அவன் பிடி நழுவியது. எல்லாரும் கீழே விழுந்தனர். ஆனால், அந்த மரக்கிளையோ, முறியாமல் அப்படியே இருந்தது. இனி என்ன செய்வது என்று எல்லாரும் ஆலோசித்தனர். அந்தக் கூட்டத்திலிருந்த வேறொரு அறிவாளி இப்படிச் சொன்னான்.

"நண்பர்களே, நாம் இந்த மரத்தின் கீழே தீ மூட்டுவோம். அந்த வெப்பத்தில் கிளை ஒடிந்து கீழே விழுந்துவிடும்!" என்றான்.

எல்லாரும் அது ஒரு சிறந்த கருத்துத்தான் என்று ஏற்றுக் கொண்டனர். அந்த அறிவாளி அவனிடம் இருந்த ஒரே ஒரு தீப்பெட்டியை வெளியே எடுத்தான். ஆனால், அவனுக்கு ஒரு சந்தேகம். தீக்குச்சி ஏரியவில்லை என்றால் என்ன செய்வது? அவன் ஒரு தீக்குச்சியை உரசி பற்ற வைத்துப் பார்த்தான். அது எரிந்தது. ஆயினும் அடுத்த குச்சி எரியவில்லையென்றால் என்ன செய்வது? அவனுக்கு மீண்டும் சந்தேகம் வந்தது. அடுத்த தீக்குச்சியையும் அவன் பற்ற வைத்துப் பார்த்தான். அப்படி தீப்பெட்டியில் இருந்த எல்லா தீக்குச்சியும் தீரும்வரை அவன் உரசி உரசிப் பார்த்தான். கடைசியில் அவன் திருப்தியுடன் சொன்னான்.

"தீக்குச்சிகளெல்லாம் தீர்ந்துவிட்டன. ஆயினும் என்ன? எல்லா தீக்குச்சிகளும் நன்றாக எரியக் கூடியவைதான் என்று நமக்குத் தெளிவானது அல்லவா?" என்றான்.

முன்பு மரத்திலிருந்து விழுந்த அறிவாளி, மற்றொரு கருத்தைச் சொன்னான்.

"நண்பர்களே, நான் முன்பு மரத்திலிருந்து கீழே விழுந்தபோது என் தலை கிளையில் மோதியது. அப்போது நான் நிறைய நட்சத்திரங்களையும் தீப்பொறிகளையும் பார்த்தேன். அதுபோன்ற தீப்பொறிகளை வைத்து நாம் இந்த மரத்தை எரிய வைக்கலாம். அதற்கு என்ன செய்ய வேண்டும்? நீங்கள் என் தலையில் மாறி மாறி அடிக்க வேண்டும். அப்போது நான் பார்க்கும் தீப்பொறிகளை நீங்கள் உடனே பிடித்துச் சேகரிக்க வேண்டும்!" என்றான்.

நண்பர்கள் அதை ஏற்றுக்கொண்டனர். பிறகு அந்த அறிவாளியை மாறி, மாறி அடித்தனர். அடி வாங்கும்போது அவன் நிறைய நட்சத்திரங்களையும் தீப்பொறிகளையும் பார்த்தான். ஆனால், அதையெல்லாம் பிடித்து நண்பர்களிடம் கொடுப்பதற்கு அவனால் முடியவில்லை. அவர்கள் மீண்டும் கூடி அமர்ந்து சிந்தித்தனர். அவர்களில் ஒருவன் அப்போது நல்லபடியாகச் சிந்தித்தான். அவன் சொன்னான்.

"நண்பர்களே, நாம் திரும்பிச் சென்று, வழியில் போட்டுவிட்டு வந்த கோடரிகளை மீண்டும் எடுத்து வரலாம். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை!" என்றான்.

அவ்வாறு அவர்கள் சென்று தங்கள் கோடரிகளுடன் திரும்பி வந்தனர். தேவையான மரத்தை வெட்டி எடுத்துக் கொண்டு கிராமத்துக்குச் சென்றனர். தங்களது புத்திசாலித்தனத்தை நினைத்து தங்களை தாங்களே மிகவும் மெச்சிக் கொண்டனர்.

## விடுகதைகளும் விடைகளும்

- பூட்டு இல்லாத பெட்டியை திறக்கலாம், ஆனால் மீண்டும் பூட்ட முடியாது. அது என்ன?

  **தேங்காய்**

- தேவை என்றால் வீசுவார்கள், தேவையில்லை என்றால் எடுத்து வைப்பார்கள். அது என்ன?

  **நங்கூரம்**

- ஒட்டிப் பிறந்த சகோதரர்கள் சேர்ந்தால் மற்றவர்களை பிரிக்கவே சேருவார்கள். அது என்ன?

  **கத்தரிக்கோல்**

## படத்தில் உள்ள 6 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



முயற்சி எதுவும் சுலபமில்லை!
ஆனாலும் எல்லாமே சாத்தியம்தான்.
- அடோல்ப் ஹிட்லர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆவா குழுவினருக்கு ஆளுநர் விடுத்த அழைப்பு

ஆவாக் குழுவினரைத் தான் சந்திக்க விரும்புவதாகவும் எந்தவித பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லாமல் ஆவா குழுவினரைச் சந்திக்க முடியுமென்றும் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் இந்த அறிவிப்பு உண்மையில் வரவேற்கப்பட வேண்டியது.

எமது இளைஞர்கள் வழிப்படுத்தப்பட வேண்டும். அந்த வழிப்படுத்தல் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கில் மிக அருந்தல் என்றே கூறவேண்டும்.

ஆவாக்குழுவினர் என்போர் வேறு யாருமிலர். அவர்கள் எங்கள் பிள்ளைகள். எங்கள் இனத்தின் எதிர்கால சந்ததியினர். ஆவாக் குழுவில் சேர்ந்து தங்கள் பிள்ளைகள் வாழ்வை அவமே கழிக்கின்றனர் என்ற துூரத்தில் சதா கண்ணீர் விடுகின்ற பெற்றோரின் துயரம் தீர்க்கப்பட வேண்டும்.

வாள்வெட்டு நடத்துவது, சண்டை செய்வது, அழிவு நடவடிக்கையில் ஈடுபடுவது என்பதை இளைஞர் குழுமங்கள் தங்களின் தொழிலாகக் கொண்டால் இந்த மண்ணில் எவரும் நிம்மதியாக வாழ முடியாது.

பெறுமதியான மோட்டார் சைக்கிள்களை கடனடிப்படையில் வழங்குகின்ற லீசிங் கம்பனிகளின் ஆக்கிரமிப்பு, அதிகமான தொலைபேசிப் பாவனை, எல்லாவற்றுக்கும் மேலாக வடபகுதியில் ஓஹோ என்று விற்பனையாகும் மதுபானம் என்ற தீயனவற்றின் தாராளத் தன்மையும் வேலையின்மை, உயர் படிப்புக்கான வாய்ப்பின்மையும் வசதியின்மையும் என்பன காரணமாகவும் நம் இளைஞர்களில் ஒரு பகுதியினர் தங்கள் பாதையைத் திசை மாற்றிக் கொண்டனர்.

இதற்கு மேலாக வடபகுதி குழப்ப நிலையிலும் பதட்டமான சூழ்நிலையிலும் இருக்க வேண்டுமென நினைக்கின்ற படைத்தரப்பின் பின்னணியும் ஆவாக்குழுவின் தோற்றுவிப்பில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவை தவிர, ஆவாக்குழு என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்படுகின்ற இளைஞர்கள் தங்களின் எதிர்காலம் இருண்டு விட்டதாகவும் சமூகக் கௌரவத்தை தாம் இழுந்து விட்டதாகவும் நினைத்து, இனி இயல்பான வாழ்வென்பது தமக்கு ஆகாதென்றும் கருதுகின்றனர்.

இதன்காரணமாகத் தொடர்ந்தும் தாம் வாள் ஏந்திய வண்ணமே தமது பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளதாக அவர்கள் நினைக்கின்றனர்.

இதன் வழியீறாக ஆவா குழு என்ற ஒரு குறித்த இளைஞர் குழுமம் இன்று வரை இயங்கு நிலையில் உள்ளது.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் ஆவாக் குழு இளைஞர்களை ஆளுநர் சந்திக்க விரும்புவது அந்த இளைஞர்களின் வாழ்வில் ஒரு புதிய மாற்றத்தை, மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழிவகுக்கும் என நம்பலாம்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தை ஆவா குழுவில் உள்ள ஒவ்வொரு இளைஞர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவ்வாறான இளைஞர்களுக்கு சுய தொழில் முயற்சிகளை, ஆன்மீகப் பயிற்சிகளை வழங்குவதும் அவசியம்.

ஆக ஆவா குழுவினரை வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் சந்திக்க விரும்புகின்ற அந்தச் சந்தர்ப்பம் நிறைவேறுவதற்கான ஏற்பாட்டை வடபகுதியிலுள்ள ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், ஊடக அமைப்புக்கள் முன்னின்று முயற்சி செய்தால் நிச்சயம் ஆவாக்குழு இளைஞர்களை வழிப்படுத்திய பெருமையும் புண்ணியமும் நம் அனைவருக்கும் உரியதாக இருக்கும்.

இதுவே இன்றைய அவசிய தேவை.

## 15 வருடங்களுக்கு முன்பே
# காத்தான்குடியிலிருந்து சென்ற சஹ்ரான்

(காத்தான்குடி)

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவன் சஹ்ரான் கடந்த 15 வருடங்களுக்கு முன்னரே காத்தான்குடியில் இருந்து சென்று விட்டதாக காத்தான்குடி நகர சபையின் தவிசாளர் சஹ்ல் ஹமீட் முஹம்மது அஸ்பர் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சஹ்ரானின் குழுவில் அதிகமாக போனால் இருநூறு அல்லது முன்னூறு பேரளவில் தான் இருந்தார்கள். சஹ்ரான் திருமணம் முடித்திருப்பது குருநாகலில்.

அவன கடந்த 15 வருடங்களுக்கு முன்னரே காத்தான்குடியிலிருந்து சென்று விட்டான். அவன் முதலில் நௌபர் மௌளவியின் தாருல் அதர் அமைப்பில் தான் இணைந்திருந்தான்.

பின்னர் அந்த அமைப்பிலிருந்து விலகி தேசிய தௌஹீத் ஜமாத்தை உருவாக்கினார். சஹ்ரானினால் தாருல் அதர் அமைப்பிற்கு பல பிரச்சினைகள் ஏற்பட்டன.

கொலை செய்வதாக அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டன. அவர்கள் பொலிஸ் நிலையத்தில் சஹ்ரானுக்கு எதிராக எழுத்து மூலமாக அறிவித்துமுள்ளார்கள்.

தாருல் அதர் அமைப்பு இன்றும் சமய ரீதியான அமைப்பாக காத்தான்குடியில் செயற்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கொள்ளையன்மீது துப்பாக்கிச் சூடு!

ஹொரணை பகுதியில் நிதி நிறுவனமொன்றில் கொள்ளையிட முயற்சித்த ஒருவர் பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹொரணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாணந்துறை வீதியில் அமைந்துள்ள நிதி நிறுவனத்தில் நேற்றுகொள்ளையிட வந்த ஒருவரே இவ்வாறு பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (இ-7)

## விபத்துக்குள்ளான பாரவூர்தி இருவர் காயம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டிசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடுப்பகுதியில்நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்

புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் நோக்கி நேற்றுக் காலை எரு ஏற்றிக் கொண்டு பயணித்த லொறி பாரவூர்தி ஒன்று வாகனத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கட் டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள காணிக்குள் தடம் புரண்டது

இந்த விபத்தில் பாரவூர்தியில் பயணம் செய்த சாரதி மற்றும் நடத்துனர் ஆகிய இருவரும் காயங்களுக்கு உள்ளாகி ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் சிகிச்சைகாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(9-281)

## ரணிலுக்கு ஓய்வுதேவை

(கொழும்பு)

மாலைதீவின் முன்னாள ஜனாதிபதி, பல பேர் முன்னிலையில் ரணிலை ஓய்வு பெறுமாறு கூறிய சம்பவம் இடம்பெற்றது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும், சபாநாயகருமான மொஹமட் நஷீம் உட்பட 90 பேருககாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அலரி மாளியையால் இராப்போசன விருந்து ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார.

இதன்போது இடம்பெற்ற நட்புறவான கலந்துரையாடலில், "நாங்கள் தற்போது பிரதமருக்கு ஓய்வு கொடுப்போம். அவருக்கு தற்போது களைப்பாக இருக்கும்" என மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் "ஓய்வு பெற வேண்டுமா" என அதிர்ச்சியுடன் வினவியுள்ளார். அதற்குப் பதிலளித்த மாலை தீவின் முன்னாள் ஜனாதிபதி, "இந்த இரவில் ஓய்வு வழங்குவதற்கே நான் எண்ணினேன்" எனக் குறிப்பிட்டார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில மண்டைதீவு, பூம்புகார், மண்கும்பான், அல் லைப்பிட்டி, மண்கும்பான் நீர்ப்பாசனம், வெண்புரவி நகர் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் கோவில் குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## உலமாவின் வழிகாட்டலை மீறி இனி எந்த முஸ்லிமும் செயற்பட முடியாது-அமீர்

(வாழைச்சேனை)

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவின் வழிகாட்டலை மீறி எதிர் காலத்தில் முஸ்லிம்கள் எவரும் இலங்கையில் செயற்படுவதற்கு அனுமதிக்கப் படமாட்டார்களென மட்டக் களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பாக பிரதேச மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் எம்.எஸ். கே. ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம்கள் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் வழிகாட்டலை மீறி எதிர்காலத்தில் எந்தவித மத ரீதியான செயற் பாடுகளையும் செய்யமுடியாது அவர்களின் வழிகாட்டல்களில் தான் மத ரீதியான செயற்பாடுகள் இடம்பெறும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

இன்று இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் கண்காணிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதனை ஒவ்வொருவரும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். எமது ஒவ்வொரு செயற்பாட்டையும் இறைவன் கண்காணிக்கின்றான் என்பதைப்போன்று எமது செயற்பாடுகள் அனைத்தும் கண்காணிக்கப்படுகின்றன.

சட்டத்தை மதிக்கின்ற மக்களாக நாம் எப்போதும் இருக்க வேண்டும். மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது தலைக்கவசத்தை அணிவதற்குக்கூட நாங்கள் தயாரானவர்களாக இல்லை. அவ்வாறு இருக்காமல் இனி வரும் காலங்களில் எமது நாட்டின் சட்டத்தை முழுமையாக மதிக்கின்றவர்களாக நாம் இருக்க வேண்டும்.


அண்மையில் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் சகோதரர் ரவூப் ஹக்கீமிடம் உங்களது சமூகத்தை சார்ந்த மக்கள் சட்டத்தை மதிக்கின்ற மக்களல்ல, குறைந்தது தலைக் கவசத்தை அணிந்து செல்வதற்கு தயாராக இல்லை ஏன்? என்று கேள்வி கேட்ட போது சகோதரர் ரவூப் ஹக்கீம் பதிலளிப்பதில் சங்கடப்பட்ட நிலையை அந்த நிகழ்ச்சியை பார்த்தவர்கள் அவதானித்திருப்பார்கள்.

இன்று நாட்டிலே உள்ள சகோதர இன மக்கள் சட்டத்தை மதிக்காததால் எங்களை இலஞ்சம் கொடுக்கின்ற சமூகமாகப் பார்க்கின்றார்கள். இவைகளை வைத்து மிகவும் மோசமாக எழுதுகின்றார்கள். வாழைச்சேனையிலே அராபிய சட்டம் என்று அண்மையில் சிங்கள பத்திரிகையிலே கட்டுரை ஒன்று வந்தது. இதனை எத்தனை பேர் வாசித்தீர்கள் என்று எனக்குத் தெரியாது.

இஸ்லாமிய மார்க்கம் அழகாக சொல்லியிருக் கின்றது. மற்றைய மதங்களை மதியுங்கள் என்றும் ஏனைய மத பெரியார்களை மதியுங்கள் என்றும். அதனை எமது பிரதேச இளைஞர்கள்கடைப்பிடித்து நடக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அருள்வெள்ளம்



நமது வாழ்க்கையின் நோக்கம் அமைதியும் நிறைவும் பெற்று வாழ்வதோடு ஆன்ம வளர்ச்சி பெற வேண்டும் என்பதேயாகும். ஆன்ம வளர்ச்சியை முதற் குறிக்கோளாகக் கொண்டால் பிறவெல்லாம் அற்பமாகவே தோன்றும். மனதை நிறை நிலையில் வைத்துக் கொள்வோம். கடமையின் மதிப்புணர்ந்து செயலாற்றி வாழ்வோம்.

உண்மையிலேயே ஆன்ம வளர்ச்சியை வேண்டுபவர் சிக்கல்களையும், பிணக்குகளையும் தாண்டி, அறிவைச் சுதந்திரமாக இயங்க விட வேண்டும். விரிந்த பேரியக்க மண்டல நிகழ்ச்சிகளையும், மனித வாழ்வையும் இணைத்து ஒத்துச் சிந்தியுங்கள். தன்முனைப்பு என்ற திரை கரைந்து விடும். தன் முனைப்பும், இயற்கை நியதியறியாமையும் ஒன்றை ஒன்று தழுவி நிலைத்திருக்கின்றன.

இதனால் மனிதன் தன்னிடம் ஒரு கற்பனை மதிப்பை (False Prestige) உருவாக்கிக் கொள்ளுகிறான். இந்த மருள் கொண்ட மதிப்பை அடிப்படையாகக் கொண்டு பிறரை ஒப்பு நோக்கும் போது கருத்தில் வேறுபாடுகளும், பிணக்குகளும் எழுகின்றன. தனது மனதைச் சீரமைத்துக் கொண்டு எவரை எக்கருத்தைத் தன்னோடு ஒப்பு நோக்கினாலும், ஒரு சமநிலை உணர்வு உண்டாகும். இந்த உணர்வில் தான் பேரின்பம் தொக்கி நிற்கின்றது. இப்பேருணர்வே அருள் வெள்ளமாகும்.

# இ.போ.ச.வடமாகாண விளையாட்டு கழகத்தின் கரப்பந்தாட்டம் யாழ்ப்பாணம் வலய ஆசிரியர் அணி சம்பியன்


யாழ்.வலய ஆசிரியர் அணி


இ.போ.ச.வடமாகாண அணி


யாழ்.தபாலக அணி

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அரச நிறுவனங்களுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ்.வலய ஆசிரியர் அணியை எதிர்த்து இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண அணி மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ்.வலய ஆசிரியர் அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

இரண்டாம் இடத்தை இ.போ.ச. வடமாகாண அணியும் மூன்றாம் இடத்தை யாழ்.தபாலக அணியும் பெற்றுக்கொண்டன. (க-10)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## கிருசோபன் சிறப்பான பந்துவீச்சு ஜொலிஸ்ரார் அணிக்கு வெற்றி



யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அழைக்கப்பட்ட 8 அணிகளுக்கிடையில் விஜயரட்ணம் ஞாபகார்த்த இருபது - 20 சுற்றுப்போட்டியானது ஞானம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

8 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியில், அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெறுகின்றது.

லீக் ஆட்டமொன்றில் ஜொலிஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து பற்றீசியன் அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வென்ற ஜொலிஸ்ரார்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதற்கிணங்க களமிறங்கிய பற்றீசியன் அணி, 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 120 ஓட்டங்களை எடுத்தது. துடுபபாட்டத்தில் நிசாந்த் ரியூடர் 36, மொனிக் நிசாந்த் 31 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார்ஸ் அணி சார்பாக, கிருசோபன் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் சந்தோஸ் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

121 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி, 19.4 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அருணன்குமார் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், மணிவண்ணன் 37 ஓட்டங்களையும் தனுசாந்த் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பற்றீசியன் அணி சார்பாக, டனிஸியஸ் மற்றும் கவாஸ்கர் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர். இந்த வெற்றியுடன் லீக் சுற்றில் இரண்டாவது வெற்றியையும் ஜொலிஸ்ரார்ஸ் அணி பதிவு செய்துள்ளது. (க-26)

## விஜயரட்ணம் வெற்றிக்கிண்ணம் பிளே ஓவ் சுற்றில் சென்றலைட்ஸ்



யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அழைக்கப்பட்ட 8 அணிகளுக்கிடையில் விஜயரட்ணம் ஞாபகார்த்த இருபது - 20 சுற்றுப்போட்டியானது ஞானம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

8 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியில், அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெறுகின்றது.

லீக் சுற்று ஆட்டமொன்றில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற சென்றலைட்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய திருநெல்வேலி கிரிக்கெட் அணி, 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 124 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் சிவராஜ் 30 ஓட்டங்களையும், றொகான் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, விஜஸ்காந்த் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் சார்ளஸ் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், டர்வின் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினார்.

125 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய சென்றலைட்ஸ் அணி, ஜெனோசனின் பொறுப்பான ஆட்டம் மற்றும் செல்ரனின் அதிரடி ஆட்டம் என்பன கைகொடுக்க, 14.2 ஓவர்களில் 5 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் செல்ரன் ஆட்டமிழக்காமல் 28 பந்துகளில் 51 ஓட்டங்களையும் ஜெனோசன் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

லீக் சுற்றில் விளையாடிய 3 போட்டிகளிலும் வெற்றி பெற்று, முதல் அணியாக பிளே ஓவ் சுற்றுக்கு சென்றலைட்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.(க-26)

## எதிர்ப்புக்களை மீறி மீண்டும்...

தெரிவுக்குழு இதுவரையில் ஐந்து தடவைகள் கூடியுள்ளது. இது வரை இடம்பெற்ற அமர்வுகளில் பாதுகாப்பு செயலாளர் சாந்த கோட்டேகொட, தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைமை அதிகாரி சிசிர மெண்டிஸ் மற்றும் நாலக டி சில்வா, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா அமைப்பின் தலைவர் ரிஸ்வி மௌலவி, காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மொஹம்மட் சுபெய், கிழக்கு மாகாண முன்னாள் ஆளு நர் ஹிஸ்புல்லா ஆகியோரிடம் சாட்சியம் பெறப்பட்டுள்ளன.

இவர்கள் வழங்கிய சாட்சியங் கள் மூலம் பல உண்மைகள் அம் பலமாகியுள்ளன.

இதனையடுத்து பாராளு மன்றத் தெரிவுக்குழுவிற்கு எதிர்ப்பு களும் வெளியிடப்பட்டன. குறிப் பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவுக்குழுவின் செயற் பாடுகளை நிறுத்துமாறு கோரி யிருந்தார். எனினும் சர்ச்சை களுக்கு மத்தியில் குறித்த குழு வின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (3)

## அமைச்சுப் பதவிகளை ஏற்று...

அவர் தெரிவிக்கையில், நாங் கள் பதவி விலகும்போது அரசாங் கத்துக்கு பல கோரிக்கைகளை முன் வைத்தோம். அந்த கோரிக்கைகள் இன்னும் முழுமையாக நிறைவேற் றப்படவில்லை. குறிப்பாக எம்மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக் களுக்கு ஒரு மாதகாலத்துக்குள் தீர்வு பெற்றுத்தரவேண்டும்.

அத்துடன், குருநாகல், மினு வாங்கொடை பிரதேசங்களில் இன வாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனை வருக்கும் நீதி பெற்றுக் கொடுக்கப் பட வேண்டும் என்பதுடன் நஷ்ட ஈடு பெற்றுக்கொடுக்கப்பட வேண் டும் என தெரிவித்திருந்தோம்.

அதேபோன்று இனவாத தாக்கு தலுடன் தொடர்புபட்டவர்கள் என கைதுசெய்யப்பட்ட 450க்கும் அதிக மானவர்கள் விடுவிக்கப்பட்டுள்ள னர். ஆனால் சிறு சிறு காரணங் களுக்காக முஸ்லிம் மக்கள் கைது செய்யப்பட்டு பிணை வழங்க முடியாதவகையில் தடுத்துவைக் கப்பட்டுள்ளனர். அவர்களை விடு தலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்திருந் தோம்.

அத்துடன் அபாயாவுக்கு எதி ராக வெளியிடப்பட்டிருக்கும் சுற்று நிருபத்தை இரத்துச்செய்ய வேண் டும் என்றும் வெறுப்பூட்டும் வகை யில் பேசுவதற்கு எதிராக சட்டம் நிலைநாட்ட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தோம். இவை எது வும் இன்னும் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை.

அத்துடன் அமைச்சுப் பதவிகளில் விலகிய அனைவரும் யாரையும் பாதுகாப்பதற்கோ சுயலாபத்துக்கோ பதவி விலகவில்லை. முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டே பதவி விலகத் தீர்மானித் தோம். அதனால் எமது கோரிக்கை களை நிறைவேற்றிக்கொள்ளாமல் மீண்டும் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதே நல்லது என்பதே எமது நிலைப் பாடு என்று தெரிவித்தார். (3)

## விகாரை கட்டு...

ரலிய ரத்தின தேரரிடம் கூறுவேன் என மனோ கணேசன் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத் தில் எழுதியிருக்கின்றார்.

இந்து-பௌத்த ஐக்கியம் நல் லதே. ஆனால் அதற்கு நிபந்தனை களாக, "சிங்கள பௌத்த ஆளில் லாத ஊரில்" காணி பிடித்து விகாரை கட்டுவதையும், தொல்பொரு ளாராய்ச்சியில் பௌத்த சிதைவு களை வடகிழக்கில் தேடும் போது "தமிழ் பௌத்த" வரலாற்றை மறந்து விடுவதையும் நிறுத்த வேண்டும் என இரத்தின தேரரி டம் நான் இன்னும் சில தினங் களில் சொல்வேன்.

இந்த அடிப்படையில் அவரு டன் கலந்துரையாடுவேன். அவர் என் நண்பர் தான். மூன்று வருடங் களாக சபையில் என் பக்கத்து ஆசனத்தில்தான் அவர் இருந்தார் என்றும் அவர் அதில் குறிப்பிட் டுள்ளார். (3)

## ஜனாதிபதி வேட்...

பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி வேட் பாளர் பதவிக்கு இதுவரை தான் எந்த விண்ணப்பமும் முன்வைக்க வில்லை எனவும் கட்சியின் தலை மைத்துவத்துடன் தனது பெயர் பிரேரிக்கப்பட்டால் அது குறித்து ஆராயத் தயார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள அனைத்து உறுப் பினர்களும் தனக்கு ஒருமித்து ஆதரவளிக்கும் பட்சத்தில் இது குறித்து தீர்மானிப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஏற்கனவே இரண்டு வாரங் களுக்கு முன்னர் உள்ளூர் ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரி வித்திருந்த சபாநாயகர் கரு ஜயசூரிய இக்கருத்தினை தெரிவித்திருந் தார். இந்நிலையில் அவர் மீண் டும் குறித்த கருத்தினை தெரிவித் திருப்பது, ஜனாதிபதி தேர்தலில் களம் இறங்குவது தொடர்பாக அவருக்கு இருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றது.

மறுபுறத்தில், ரணில் விக்ரம சிங்க மற்றும் அமைச்சர் சஜித் பிரேமதாஸா ஆகியோரும் ஜனாதி பதி தேர்தல் தொடர்பான எதிர்பார்ப் போடு காய்களை நகர்த்தி வருகின்ற னர்.

இது ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பலவீன மான நிலையை தோற்றுவிக்கும் வாய்ப்பை அதிகரிக்கக்கூடும் என் றும் தெரிவிக்கப்படுகிறது. (3)

## ஓய்வூதியக் கொடுப்பனவை...

2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரும் இதன் பின்னரும் ஓய்வுபெற்ற அரச தொழிலாளர்களுக்கு வழங் கப்படும் ஓய்வூதியக்கொடுப்பனவு களில் காணப்படும் பிரச்சினை களுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே இந்த கொடுப்பனவு களை அதிகரிக்க தீர்மானிக்கப்பட் டுள்ளது.

அதற்கமைவாக 2015ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற 500,000 பேருக்கு ஓய்வூதிய கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளதுடன் 2,800 ரூபாயிலிருந்து 20,000 வரையில் ஓய் வூதியத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (3)

## அமைச்சுப்பத...

னைத் தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துத் தெரி வித்த அவர்,

நாம் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து அவர்களின் ஆலோசனை களைப் பெற்றுக்கொண்டோம். அதேபோன்று எனது மாவட்ட மக் களும் பதவியைப் பெற்றுக்கொள்ளு மாறு என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர். ஆகவே கட்சியும், அரசும் குறித்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதாயின் மீண்டும் பதவியைப் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப் பேன். எனது மாவட்ட மக்களின் வேண்டுகோளுக்குத் தலைசாய்த்து மீண்டும் பதவியை ஏற்றுக்கொள் ளத் தயாராகவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (3)

## பணிவெற்றிடத்...

நேரடியாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து முதல் கட்டமாக 454 பேர் நேர்முகத் தேர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் 137 பேர் முஸ்லிம் நபர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (3)

## முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியமை...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா ஓமந்தை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வசந்த மண்டபத் திற்கான அடிக்கல் நாட்டி வைத்ததன் பின் கருத்துரைக்கையில் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது இலங்கையில் இருக்கின்ற அரசியல் நிலைமை பயங்கரவாத தாக்குதல் அதன் விளைவு தொடர்பாக மக்கள் நேரடி யாக பல பாதிப்புகளை சந்திக்கா விட்டாலும் மறைமுகமாக பல பாதிப்புகளை சந்தித்திருக்கின் றார்கள்.

வட மாகாணத்தில் குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் வெயிலினு டைய தாக்கம் மிகக் கொடூரமாக இருக்கின்றது. இதனால் மக்கள் பல இன்னல்களை சந்தித்திருக் கின்றார்கள். தற்போதைய அரசியல் சூழ்நிலையானது அரசாங்கத்தினு டைய ஸ்திரமற்ற தன்மை காரண மாக மக்களுடைய பாதிப்பை நிவர்த்தி செய்யக்கூடிய வகையிலே அரசாங் கத்தினுடைய கவனம் மக்களுடைய கவனத்தில் செல்லவில்லை.

பயங்கரவாதத் தாக்குதலின் பிற்பாடு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தாக்குதலின் பிற்பாடு அரசாங்கத் தில் இருக்கின்ற பங்காளி கட்சிகள் அதைவிட பலருடைய கருத்து அந்த தாக்குதலை மையப்படுத்திய தாகவே இன்றுவரை இருக்கின் றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படிப்பட்ட உதவிகளை செய்ய வேண்டும் என்பதில் தற்பொழுது ஒரு ஸ்திரமற்ற தன்மையிலேயே அரசாங்கம் இருக்கின்றது. குறிப் பாக வன்னிப் பிரதேசத்தில் கடும் வரட்சியால் மக்கள் நேரடியாக பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான அவசர மாக வழங்கக்கூடிய உதவிகள் அரசாங்கத்தினால் கவனம் செலுத் தப்படவில்லை என்பது தான் என் னுடைய கருத்தாகும்.

முஸ்லிம் அமைச்சர்கள் அவர் களுடைய இராஜினாமாவை செய்திருந்தார்கள் குறிப்பிட்ட மூன்று நபர்கள் மீதான குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டது. அப்படியான சூழ்நிலையில் ஒரு தனிப்பட்ட ரீதியில் செய்யவேண்டிய விடயத்தை ஒரு சமூகம் சார்ந்து அவர்கள் செய்திருப்பது அவர்களு டைய ஒற்றுமையை வெளிப்படுத் தினாலும் பயங்கரவாதிகள் அல் லது நேரடியாக குற்றம் சாட்டப்பட்ட அரசியல்வாதிகள் தப்பித்து கொள் வதற்கு இது ஒரு வாய்ப்பாக அமை கிறது என சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார். (3-9)

## நீரில் மூழ்கி...

வத்தில் தலைமன்னார் மேற்கு பகுதியைச் சேர்ந்த இளங்குமரன் அஜய் என்பவரே இவ்வாறு உயி ரிழந்துள்ளார்.

நேற்று பகல் தனது நண்பர்களு டன் கிரிக்கெட் விளையாடிய பின்னர் தலைமன்னார் மேற்கு கடல்பகுதிக்கு நீராடச் சென்றுள்ளார்.

இந்நிலையில் இவர்கள் நீரா டிக் கொண்டிருந்தபோது கடலில் நங்கூரமிடப்பட்டிருந்த படகை தொட்டுவிட்டு வருகின்றேன் என கூறிச்சென்ற வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாக ஆரம் பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

நீந்திச் சென்ற தமது நண்பன் காணாமல் போனதைத் தொடர்ந்து குறித்த நண்பர்கள் கிராமத்தில் தகவல் தெரிவித்தனர். இதைய டுத்து கிராமத்து மீனவர்கள் காணாமல் போன மாணவனை சடலமாக கண்டெடுத்துள்ளனர்.

மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசா லைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள துடன் தலைமன்னார் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (3)

## பொதுமக்களின்...

தில்லை எனவும் பதில் அதிகாரி கள் கடமைக்கு அமர்த்தப்படு வதில்லை எனவும் அண்மையில் வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரி யர் தலையங்கம் குறைகளைச் சுட் டிக்காட்டியது.

குறித்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் ஆராய்ந்த வட மாகாண ஆளுநர் அரச அதிகாரிகளால் பொதுமக்களுக்கு ஏற்படும் பிரச் சினை தொடர்பில் உடனடித் தக வல்களை வழங்க விசேட தொலை பேசி வலையமைப்பு செயற்படுத் தப்படவுள்ளதோடு அதற்கேற்ப நட வடிக்கை எடுப்பதற்கான விசேட நடமாடும் செயலணியும் உருவாக் கப்படவுள்ளது.

வட மாகாணத்தைப் பொறுத்த வரை பொதுமக்களிடமிருந்து வரும் அதிகளவிலான குறைபாடு கள் அரச அதிகாரிகளைத் தொடர்பு படுத்தி வருவதாகவும் அதற்கேற்ப ஆளுநரின் பொதுமக்கள் தொடர் பாடல் அதிகாரி மூலம் சம்பவ இடங் களுக்கு நேரடியாகச் சென்று பொது மக்களின் குறைகள் தீர்க்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில் பொது மக்களின் குறைகளை விரைவாக தீர்ப்பதற்காக விசேட தொலைபேசி வலையமைப்பும் விசேட நட மாடும் செயலணியும் உருவாக்கப்பட வுள்ளது. (3-10)

## நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிலம்...

முல்லைத்தீவு பழைய செம் மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் அடாத்தாக அமைக் கப்பட்டுள்ள குருகந்த ரஜமஹா விகாரைக்கு கொழும்பு அனுராத புரம் வெலிஓயா பகுதியிலிருந்து மூன்று பஸ்களிலிருந்து அழைத்து வரப்பட்ட சிங்கள மக்கள்.

சத்தியா கிரகத்தில் ஈடுபட்டனர் அதேவேளை தற்போது மேலும் வெலிஓயா பிரதே சத்தில் இருந்து இரண்டு பேருந்துகளில் மக்களை அழைத்து அனைவருமாக ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தேசிய உரிமைகள் இயக்கத் தின் தலைவர் பெங்கமுவே நாலக்க தேரர் தலைமையில் 5க் கும் மேற்பட்ட பிக்குகள் குருகந்த ரஜமஹா விகாரை விகாராதிபதி கொலம்ப மேதாலங்க தேரர் மற்றும் 300 க்கும் மேற்பட்ட சிங் கள மக்கள் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த சர்ச்சைக்குரிய ஆலயப்பகுதி யில் இரண்டு தரப்பினரும் அமை திக்கு பங்கமின்றி வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என முல் லைத்தீவு மாவட்ட நீதிமன்று கடந்த மே மாதம் 6 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

இதேவேளை அனுமதியற்ற முறையில் நடப்பட்ட விகாரை பெயர்ப்பலகை மற்றும் பிள்ளையார் ஆலய பெயர்ப்பலகை ஒன்று ஆகி யன வீதி அபிவிருத்தி திணைக் களத்தால் அகற்றப்பட்டது. இந் நிலையில் விகாரை பெயர்ப்பலகை அகற்றப்பட்டமை உள்ளிட்ட விட யங்கள் தொடர்பில் விகாரை வளாகத்தில் தற்போது இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள னர். (3-281)












**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மின்சார சபையின் புதிய செயலி இன்று அறிமுகம்

இலங்கை மின்சார சபையின் வாடிக்கையாளர் சேவையை மேலும் செயற்றிறன் மிக்கதாக மாற்றுவதற்கு புதிய அதிதிறன் அலைபேசி செயலியை (Smart Phone App) அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்தச் செயலி நாளை முதல் அன்ட்ரொய்ட் மற்றும் ஐஓஎஸ் இயங்குதளங்களில் தரவிறக்கம் செய்ய முடியும் என்று மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

CEB Care எனும் பெயரில் இந்த செயலி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

"வாடிக்கையாளர்கள் தமது அதிதிறன் அலைபேசியில் CEB Care என்ற செயலியை, புதிவிறக்கம் செய்து பயன்படுத்த முடியும்.

மின்வெட்டு முறைப்பாடுகளை முன் வைத்தல், மின் கட்டணம் தொடர்பிலான சேவைகளை இந்த செயலி ஊடாக வாடிக்கையாளர்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்" என்று மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சகதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-3)

## எதிர்வரும் 25ஆம் திகதி கம்போடியாவுக்கு பயணமாகும் மைத்திரி



இந்த மாத இறுதியில் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கம்போடியா செல்ல உள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 26ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளில் ஜனாதிபதி கம்போடியாவுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

கம்போடியா அரசாங்கத்தின் அழைப்புக்கு இணங்க ஜனாதிபதி எதிர் வரும் 25ஆம் திகதி அங்கு புறப்பட்டு செல்லவுள்ளார்.

கம்போடியா செல்லும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்த நாட்டின் அரச பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி கடந்த 13ஆம் திகதி தஜிகிஸ்தானில் நடைபெற்ற ஷெங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்ள சென்றிருந்தார். ஜனாதிபதியுடன் 50 பிரதிநிதிகள் தஜிகிஸ்தான் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி அண்மையில் குறுகிய காலத்திற்குள் சீனா, இந்தியா, சிங்கப்பூர், தஜிகிஸ்தான் உட்பட சில நாடுகளுக்கு விஜயம் செய்து உள்ளதுடன் இந்த மாத இறுதியில் கம்போடியா செல்ல உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

**Wanted**
Marketing and promotional officers. Basic Salary T& C applied incentives & allowances.
Call: 0212224550/ 0777033039

**வீடு விற்பனைக்கு**
வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை குளிப்பன் வீதியில் 1 3/4 பரப்புடைய வீடு சகலவசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
077 312 4650 (9181)

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் எமரல்ட் ஐல் மூலம்
**ஜோர்தான்**
ஆடைத்தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள்
40 ஆடைத்தொழிற்நுட்ப வெற்றிடங்கள்
Factory Audit Manager(CFA Mgr), JNR CFA / Quality Auditor, Cutting Quality Manager & Controller, Cutting In Charge, Production Quality Controller and Supervisor, Packing In Charge, Mechanic, Garment Technician, Industrial Engineer, Junior CAD (Coasting & Production), CAD Manager
சம்பளம் ரூ.100,000 - ரூ.500,000
Emerald Isle Manpower & Travel Services
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
License No. 2268
0777 324 004, 077 00 38 215, 021 2219 221
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

**CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
விசேட விலைக்கழிவு
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-6696)



**British College of Higher Studies**
BCHS
பெற்றோர்களே! மாணவர்களே,
ஆங்கிலத்தில் புலமை பெற மிகச்சிறந்த வாய்ப்பு
DIPLOMA IN ENGLISH (6 MONTHS COURSE)
தொழில்புரிவோர், பல்கலைக்கழகம் செல்வோர், பரீட்சை எழுதுவோருக்கும் மிகச்சிறந்த பாடநெறி
வார நாட்கள், அடிப்படையிலிருந்து...
~~25,000~~ JUST 17,000
முதல் 20 பேருக்கு ADMISSION FEE FREE
வாரம் 08 மணித்தியாலம்
01.07.2019 முதல்... புதிய பிரிவுகள்
Call: 021 222 4550/ 077 703 3039
Sirambiyadi lane, Off Stanley road, Jaffna

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6532)

**சாவகச்சேரியில்...**
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை
**அருள்**
இல.1, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576
(C-6615)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
**ராஜ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623
(9098)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

**CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT**



July 2019க்கான புதிய பிரிவு ஆரம்பம்
பகுதி நேர / முழு நேர கற்கை நெறி
படிக்கும் போதே வேலை வாய்ப்பு
கல்விக்கான வங்கிக் கடன் வசதிகள்
புலமைப்பரிசில்கள் மற்றும் சலுகைகள்
படித்து முடித்ததும் 100% வேலை வாய்ப்பு
G.C.E O/L உடன்
TUTION FEE 30,000/- ONLY
CTHI
CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0771041923 | 0213146171

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536

**முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்**
எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 11.30 வரை
Tilko Jaffna City Hotel- Jaffna
பங்குச் சந்தை முதலீட்டு நிபுணர்களின் கருத்துப்பரிமாற்றங்களுடன் கூடிய முதலீட்டு ஆலோசகர்கள் சந்திப்பு.
முன்பதிவுகளுக்கு:- 021 222 1455 / 0777 822 014 / 0777 105 205
அனுமதி இலவசம்
CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் செழுமையின் பிறப்பிடம்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.